தினமணி

ஏற்றுமதி எழுச்சி தொடருமா?

எஸ். கோபாலகிருஷ்ணன்

First Published : 31 Jan 2011 12:44:36 AM IST

சென்ற டிசம்பர் மாதத்தில், இந்தியாவின் ஏற்றுமதி 36.4 சதவீதம் அளவுக்கு அதிகரித்துள்ளது. இதன் மதிப்பு 2,250 கோடி டாலர் ஆகும். கடந்த 33 மாதங்களில் இதுவே அதிகபட்ச ஏற்றுமதி. இது ஒரு சாதனை எனலாம்.

பொதுவாக, ஒரு நிதி ஆண்டில், கடைசி மூன்று மாதங்களில் ஏற்றுமதி அதிகரிப்பது வாடிக்கை. எனவே, 2011-ம் ஆண்டில், ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் ஏற்றுமதி மேலும் கணிசமாக அதிகரிக்கும் என்பது மத்திய வர்த்தக அமைச்சகத்தின் கணிப்பு.

அதிக அளவில் ஏற்றுமதியான பொருள்கள் ஜவுளி, சிறிய மோட்டார் வாகனம், உருக்கு, உருக்கு சார்ந்த மெஷின்கள் உள்ளிட்ட பொறியியல் உற்பத்திப் பொருள்கள், ரசாயனம், மருந்துவகை, மின்னணுப் பொருள்கள், ஆபரணக் கற்கள், ஆபரணங்கள், கைவினைப் பொருள்கள், தோல் பொருள்கள் மற்றும் பிளாஸ்டிக் பொருள்கள்.

ஏற்றுமதியில் சரிவைச் சந்தித்த பொருள்களும் உண்டு. முக்கியமாக தேயிலை. காரணம், இந்த ஆண்டு தேயிலை விளைச்சல் மிகவும் குறைந்தது. அதேபோல், பழங்கள், காய்கறி, வெங்காயம் ஆகியவை ஏற்றுமதியில் வீழ்ச்சி கண்டன. வெங்காயம் பற்றி சொல்லவே தேவையில்லை. அதன் ஏற்றுமதிதான் தடை செய்யப்பட்டுள்ளதே!

மற்றபடி, அண்மைக்காலமாக, ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள எழுச்சிக்கு அரசின் ஊக்குவிப்பு, சலுகைகள் தவிர, வேறு சில முக்கியமான காரணங்கள் உள்ளன: வழக்கமாக நாம் ஏற்றுமதி செய்யும் நாடுகளான அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளை மட்டும் நம்பி இராமல், ஆசியா, மத்திய கிழக்கு நாடுகள், லத்தீன், அமெரிக்கா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் இந்திய ஏற்றுமதியாளர்கள் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர்.

அடுத்து, சர்வதேசப் பொருளாதார மந்த நிலையிலிருந்து மெல்ல, மெல்ல மீட்சி அடைந்துவரும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தேவை அதிகரித்து வருகிறது.

முக்கியமாக ஓர் உணர்வுபூர்வமான காரணமும் உண்டு. குழந்தைத் தொழிலாளர்களின் உழைப்பைப் பயன்படுத்துவதில்லை என்ற உண்மை, வெளிநாட்டு இறக்குமதியாளர்களை உரிய வகையில் சென்றடைந்துள்ளது. இது ஒரு நல்ல திருப்பம்.

உதாரணமாக, காஷ்மீர் மற்றும் லக்னௌ போன்ற வடமாநிலங்களில் தயாரிக்கப்படும் கலை அழகு மிளிரும் நேர்த்தியான கம்பளங்கள், தரைவிரிப்புகள் (கார்பெட்) ஆகியவற்றுக்கு வரவேற்பு அதிகரித்துள்ளது. அவற்றின் ஏற்றுமதி முன்பைவிட கணிசமாக அதிகரித்துள்ளது.

மத்திய அரசு செயல்படுத்திவரும் ஊக்குவிப்புத் திட்டங்கள், புத்துயிர்த் திட்டங்களின் பயனாக பொருள்களின் விலையை முடிந்த அளவு குறைப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மொத்தத்தில், கடந்த காலங்களைவிட, இப்போது இந்திய ஏற்றுமதியாளர் மீதுள்ள நன்மதிப்பு, நல்லெண்ணம் உயர்ந்துள்ளது. இதைத் தக்க வைத்துக் கொள்வதற்கு ஏற்றுமதியாளர்கள் அரும்பாடுபட வேண்டும் என்பது வெளிப்படை.

பொருளாதார வல்லுநர்களின் கணிப்புப்படி, அமெரிக்காவின் இறக்குமதி எதிர்காலத்தில் 15 சதவீதம் குறையும்; ஐரோப்பிய நாடுகளின் இறக்குமதி 10 சதவீதம் குறையக்கூடும். காரணம், அந்த நாடுகளில் பொருளாதார மீட்சி முழுமையாக ஏற்படவில்லை என்பதே.

இது இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு ஓர் அச்சுறுத்தல். இந்நிலையில், ஏற்றுமதியில் எழுச்சி தொடர வேண்டும் எனில், உலகிலுள்ள புத்தம் புதிய சந்தைகளை அடையாளம் கண்டு, அந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் தீவிரம் காட்டியே ஆக வேண்டும்.

உதாரணமாக, கஸகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் போன்ற மத்திய ஆசிய நாடுகளில் சுபீட்சம் அதிகரித்துள்ளது மட்டுமல்ல. அங்கெல்லாம் தேவை கணிசமாக உயர்ந்துள்ளது.

ரஷியா, உக்ரைன் போன்ற நாடுகள் இந்தியப் பொருள்களை இறக்குமதி செய்வதில் நாட்டம் கொண்டவர்கள். குறிப்பாக, பொறியியல் துறைப் பொருள்களைப் பொறுத்தவரை, கொலம்பியா, பிரேசில் போன்ற நாடுகளின் புதிய சந்தைகள், சீனப் பொருள்களைவிட இந்தியப் பொறியியல் பொருள்களையே இறக்குமதி செய்ய விரும்புகிறார்கள். காரணம், நியாயமான விலை, நல்ல தரம் என்பதே.

இது ஒருபுறம் இருக்க, அரசுத்தரப்பில் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் பல உண்டு. அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டாலே அல்லாமல் ஏற்றுமதிப் பெருக்கத்துக்கு வழி காண முடியாது.

நெடுஞ்சாலைகள் மேம்பாடு, துறைமுகங்கள், விமானக் கூடங்கள் நவீனமயமாக்கம் ஆகியவை உடனடித் தேவை. பெங்களூர், ஹைதராபாத், தில்லி உள்ளிட்ட சில விமானக் கூடங்கள் உலகத்தரத்தில் நவீனமயமாக்கப்பட்டுள்ளன என்பது உண்மை. எனினும், நாட்டின் எட்டுத் திசைகளிலும் உள்ள விமானக்கூடங்கள், சரக்குப் போக்குவரத்துக்கு ஏதுவாக, குறிப்பிட்ட காலவரம்புக்குள் நவீனமயமாக்கப்பட வேண்டும்.

சரக்குப் பெட்டக வசதிகள், குளிர்சாதனப் பண்டகசாலைகள் ஆகியவற்றின் எண்ணிக்கை மற்றும் தரம் உயர்த்தப்பட வேண்டும். குளிர்சாதன வசதியுடன் கூடிய மோட்டார் "வேன்'கள் போன்ற வசதியை அதிகரிப்பதுடன், நாடு முழுவதும் ஊரகப் பகுதிகளில் பரவலாக்கப்பட வேண்டும். 11-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இறுதிக்கட்டத்தை நெருங்கிக்கொண்டு இருப்பதால், மேற்கூறிய திட்டங்கள் விரைவுபடுத்தப்படும் என்று நம்புவோம்.

ஏற்றுமதியை அதிகரிக்கும் நோக்கில், மத்திய அரசு ஜவுளித்துறை, கைவினைப் பொருள்கள் தயாரிப்பு, தோல் பொருள் தயாரிப்பு உள்ளிட்ட பல்வேறு தொழில்களுக்கு அண்மையில் ரூ. 1,052

கோடி அளவுக்குச் சலுகைகள் வழங்கியுள்ளது. அதிக தொழிலாளர்களை உள்ளடக்கிய தொழில்களைத் தேர்வு செய்து ஊக்குவிப்பு வழங்கப்பட்டுள்ளது, வரவேற்கத்தக்கதே.

பொறியியல் துறை மற்றும் ரசாயனப் பொருள்களின் ஏற்றுமதியை அதிகரிக்க, ஏற்கெனவே, அதாவது சென்ற ஆண்டு ஜனவரியில் வழங்கப்பட்ட சலுகைகள் நீட்டிக்கப்பட்டுள்ளன.

மூலதனப் பொருள்களின் ஏற்றுமதிக்கு முற்றிலும் வரி விலக்கு வழங்கப்பட்டுள்ளது. இது 2012 மார்ச் வரை தொடரும்.

வரிச்சலுகை பாஸ் புத்தகத் திட்டம் நடப்பாண்டு ஜூன் 30-ம் தேதி முடிவுக்கு வருகிறது. இது ஒரு முக்கியமான திட்டம். நீண்டகாலமாகச் செயல்படுத்தப்படுகிறது. உலக வர்த்தக அமைப்பு இதைக் கடுமையாக எதிர்த்து வருகிறது. எனினும், அந்த எதிர்ப்பைச் சமாளிக்கும் வகையில், இத்திட்டத்துக்கு மாற்றாக, வேறு சலுகை அளிப்பது அவசியம்.

இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில், மத்திய வர்த்தக அமைச்சகம் விரைந்து செயல்பட்டு, ஏற்றுமதியாளர்களின் நலன் காக்க வேண்டும். உலக வர்த்தக அமைப்பின் எதிர்ப்பை அமெரிக்கா போன்ற நாடுகள் எப்படிச் சமாளிக்கின்றன என்பது உலகறிந்த ரகசியம்!

அமெரிக்க விவசாயிகளுக்கு விதிமுறைகளுக்குப் புறம்பாக, அப்பட்டமாக வழங்கப்படும் சலுகைகள் கடுகளவும் குறையாத வகையில், புதிய, புதிய உருவில் இன்றளவும் தொடருகின்றன என்பதே உண்மை.

ஆபரணக் கற்கள் மற்றும் ஆபரணங்களின் ஏற்றுமதி அளவும், டாலர் மதிப்பும் அதிகரித்துள்ளது என்பதையே மனத்தில்கொண்டு, அவற்றுக்கு வழங்கப்படும் சலுகைகளைக் குறைக்க இருப்பதாகச் செய்திகள் கசிந்துள்ளன. இது முறையல்ல.

நிதி நிலையைக் காரணம் காட்டி, எந்த ஒரு துறைக்கும் சலுகைகளைக் குறைப்பதற்கு இது தருணம் அல்ல. இதை மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

ஏற்றுமதியாளர்களுக்குத் தீராத தலைவலியாக இருப்பது, சிக்கலான நடைமுறைகளும், முடிவில்லாத காகிதப் பணிகளும்தான். காலம் கடந்தாவது, மத்திய அரசு இதனை உணரத் தொடங்கியுள்ளது.

பல்வேறு ஆவணங்களையும், சான்றிதழ்களையும் தயாரிப்பதில் ஆகும் கால விரயமும், பண விரயமும் கொஞ்சம் நஞ்சம் அல்ல. ஒருவர் ஏற்றுமதி செய்யும் மதிப்பில் குறைந்தது 7 முதல் 10 சதவீதம்வரை இதற்கு செலவாகிறது.

இந்தத் தகவல் வர்த்தக அமைச்சகத்தால், ஆய்வு செய்யப்பட்டு, கண்டுள்ள அதிகாரப்பூர்வமான தகவல். இந்தச் செலவில் பாதி குறைந்தால்கூட, ஏற்றுமதிப் பொருள்களின் விலை அந்த அளவு குறைந்து, போட்டியை எதிர்கொள்வதற்கு உதவும்; ஏற்றுமதியாளர்களின் லாபமும் சற்று உயரும்.

இந்த நடைமுறைகளை எளிமைப்படுத்தும் வகையில், ""நம்பிக்கை அடிப்படையிலான" புதிய நடைமுறையை அறிமுகம் செய்ய அரசு யோசித்து வருகிறது. அதன்படி, ஏற்றுமதியாளர்கள் தரும்

சுய அறிக்கை ஏற்றுக்கொள்ளப்படும். ஒரு நிபந்தனை: அந்த அறிக்கை உண்மை என்பதற்கு அறிகுறியாக, ஒரு சார்டர்டு அக்கவுண்டென்ட் கையெழுத்து போட வேண்டும்.

அதேபோல், சுங்கத் துறை, கலால் துறை, சேவை வரித்துறை, அந்நிய வர்த்தகத் துறை எனப் பல்வேறு துறைகளின் ஒப்புதல்களைப் பெற வேண்டியுள்ளது. சம்பந்தப்பட்ட துறைகள் ஏற்கெனவே கணினி மயமாக்கப்பட்டுள்ளன. எனவே, ஒரே ஒரு "பத்திரத்தை'த் தாக்கல் செய்தால், சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலகங்களும், அந்தப் பத்திரத்தின் அடிப்படையில் செயல்படலாம் என்ற யோசனையும் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிகிறது. இந்த யோசனைகள் ஏட்டளவில் நின்றுவிடாமல் விரைந்து செயல்படுத்தப்பட்டால் நல்லது.

ஏற்றுமதிக்குச் சாதகமாக உள்ள சூழலை நன்கு பயன்படுத்திக்கொண்டு, ஏற்றுமதியாளர்களும் அரசும் முனைப்புடன் செயல்பட்டு, ஏற்றுமதியைப் பெருக்கிட வேண்டும் என்பதே இப்போதைய தேவை.

**விவசாயப் பணிகள் பாதிக்காத வகையில் வேலை உறுதித் திட்டம் செயல்படுத்தப்படுமா?**

சி. சண்முகவேல்

First Published : 31 Jan 2011 02:59:33 AM IST

திருவெறும்பூர்: தமிழகத்தில் விவசாயப் பணிகள் பாதிக்காத வகையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை அரசு செயல்படுத்த வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

நாட்டின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாக இருக்கும் விவசாயம் தற்போது வெகுவாக அழிந்து வருகிறது. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு 60 லட்சம் ஹெக்டேரில் நடைபெற்ற விவசாயம், இப்போது 48 லட்சம் ஹெக்டேரில் மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது.

காவிரி டெல்டா பாசன விவசாயத்துக்கு குறித்த நேரத்தில் தண்ணீர் கிடைப்பதில்லை, நிலத்தடி நீரும் வெகுவாகக் குறைந்து வருகிறது. உர விலை உயர்வு, வேலையாள் பற்றாக்குறையால் விவசாய நிலங்கள் விற்பனை நிலங்களாக மாறி வருகின்றன.

எஞ்சியிருக்கும் நிலங்களில் விவசாயம் மேற்கொண்டுள்ள விவசாயிகள், இப்போது கூலித் தொழிலாளர்கள் கிடைக்காமல் திண்டாடுகின்றனர். இதற்கு தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டமும் முக்கியக் காரணம்.

கிராம ஏழைகளின் வறுமையைப் போக்கும் நோக்கத்தில் மத்திய அரசால் தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தால் கிராம மக்கள் அனைவரும் பயனடைந்து வருகின்றனர்.

ஆனால், இந்தத் திட்டமானது விவசாயப் பணிகள் நடைபெறும் கால கட்டங்களிலும் செயல்படுத்தப்படுவதால் விவசாயப் பணிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

இந்த ஆண்டு விவசாயத் தொழிலாளர்கள் கிடைக்காமல் பல கிராமங்களில் இயந்திரங்களைக் கொண்டு பணிகள் நடைபெற்றன. மேலும் சில கிராமங்களில் விவசாயமே மேற்கொள்ளப்படவில்லை.

இதுகுறித்து விவசாயிகள் கூறியது: இந்தத் திட்டத்தால் கிராம மக்கள் பயனடைந்தாலும், விவசாயப் பணிகளுக்கு ஆள்கள் கிடைக்காததால் நிகழாண்டில் நடவுப் பணிக்கு இயந்திரங்கள், அதிக கூலி கொடுத்து வெளியூர்களிலிருந்து தொழிலாளர்களை வரவழைத்தோம். இந்நிலை நீடித்தால், வருங்காலங்களில் விவசாய நிலங்களை விற்பதைத் தவிர வேறு வழியில்லை என்றனர்.

எனவே, விவசாயப் பணிகள் நடைபெறும் காலகட்டம் தவிர, மற்ற காலங்களில் வேலை உறுதித் திட்டத்தை மாநில அரசு செயல்படுத்த வேண்டும் என்பதே ஒட்டுமொத்த விவசாயிகளின் கோரிக்கையாக உள்ளது.

## 100 விவசாயிகளுக்கு விதை கிராம திட்டப் பயிற்சி

First Published : 30 Jan 2011 11:06:45 AM IST

Last Updated : 30 Jan 2011 12:39:50 PM IST

உளுந்தூர்பேட்டை, ஜன. 29: விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் வேளாண்மை துறையின் சார்பில் மேல்தனியாளம்பட்டு கிராமத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 விவசாயிகளுக்கு விதை கிராம திட்டப் பயிற்சி புதன்கிழமை அளிக்கப்பட்டது.

இப் பயிற்சியில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ரத்தினசபாபதி கலந்துகொண்டு தலைமையுரையாற்றினார்.

அதில் அவர், விவசாயத் தொழில்நுட்பங்களை அறிந்து அவற்றை பயன்படுத்தி குறைந்த செலவில் கூடுதல் மகசூல் எடுத்து லாபம் அடையும் வழிமுறைகளை குறித்து பேசினார்.

திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் நடராஜன், ராஜராஜன் 1000 நெல் சாகுபடி முறையை பயன்படுத்தும் வழிமுறைகளை கணினி வழி பட விளக்கவுரை மூலம் தெளிவாக எடுத்துரைத்தார்.

திருவெண்ணெய்நல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் பா.தேவநாதன், உளுந்து பயிரில் உயர் சாகுபடி தொழில்நுட்பங்களையும், விதைப்பு, களையெடுப்பு மற்றும் அறுவடை ஆகியவற்றை இயந்திர முறையில் செய்வது தற்போதைய விவசாய ஆட்கள் தட்டுப்பாட்டில் விவசாயிகளுக்கு லாபகரமானதாக இருக்கும் என்பதை விளக்கிக்கூறினார்.

திருக்கோவிலூர் விதைச்சான்று அலுவலர் சண்முகம், ஊராட்சி மன்றத் தலைவர் தேவநாதன் உட்பட பலர் பயிற்சியில் கலந்துகொண்டு பயன்பெற்றனர். துணை வேளாண்மை அலுவலர் பிரசன்னராஜ் வரவேற்றார். உதவி வேளாண்மை அலுவலர் பாரி நன்றி கூறினார்.

"பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர அழைப்பு'

First Published : 30 Jan 2011 11:03:06 AM IST

Last Updated : 30 Jan 2011 12:35:41 PM IST

விழுப்புரம், ஜன. 29: விழுப்புரம் மாவட்டத்தில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் போது பயிர் இழப்புகளுக்காக அரசு 2 வகையான பயிர் காப்பீட்டு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது என்று மாவட்ட ஆட்சியர் ஆர். பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

இயற்கை சீற்றங்களால், உதாரணமாக வெள்ளம், வறட்சி, பூச்சிகள் மற்றும் நோய்களால் ஏற்படும் மகசூல் இழப்புகளுக்கு தேசிய வேளாண்மை காப்பீட்டு திட்டமும், பருவநிலை அடிப்படையிலான இழப்புகளான மழை, வெப்பம், காற்றின் ஈரப்பத மாறுதல்களால் ஏற்படும் பயிர் இழப்புகளுக்கு பருவநிலை அடிப்படையிலான காப்பீட்டு திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதில் தேசிய வேளாண்மை காப்பீட்டு திட்டம் அறிவிக்கப்பட்ட பயிர்களுக்கு வருவாய் பிர்காக்களில் பயிர் காப்பீட்டு திட்ட பயிர் அறுவடை பரிசோதனை மூலம் மகசூல் கணிக்கப்பட்டு கடந்த ஐந்தாண்டு கால உத்தரவாத மகசூலோடு ஒப்பீடு செய்து இழப்பீடு வழங்கப்படுகிறது.

இத்திட்டம் பயிர் மகசூல் இழப்பு

அடிப்படையிலானது.

பருவநிலை அடிப்படையிலான பயிர் காப்பீட்டு திட்டம்

ஐ.சி.ஐ.சி.ஐ. லம்பார்டு மூலம் அரசு அமல்படுத்தி உள்ளது. இத்திட்டத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், கோவை மூலம் ஒவ்வொரு வட்டாரத்திலுமாக விழுப்புரம் மாவட்டத்தில் 22 வட்டாரத்தில் அமைக்கப்பட்டுள்ள தானியங்கி பருவநிலை கணிப்பு மையங்களில் கணிக்கப்படும் பருவநிலை புள்ளி விவரங்களின் அடிப்படையில் பயிர் இழப்பீடு வழங்கப்படுகிறது.

இத்திட்டமானது பயிர் சாகுபடி இடுபொருள்கள் செலவினத் தொகை அடிப்படையிலானது. இந்த பயிர்களுக்கு திட்ட காப்பீட்டுத் தொகைக்குரிய பிரீமியம் தொகையில் 50 முதல் 76 சதம் வரை அரசு மானியம் அளிக்கிறது. பயிர்க் காப்பீட்டு திட்டங்கள் கரீப், ரபியில் சாகுபடி செய்யப்படும் பயிர்கள் அறிவிக்கப்பட்டு காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இந்த இரண்டு காப்பீட்டுத் திட்டங்களிலும் பயிர்க்கடன் மற்றும் வேளாண்மை நகைக் கடன் பெறும் விவசாயிகள் கட்டாயமாகவும், இதர விவசாயிகள் விருப்பத்தின் பேரிலும் பங்கு பெறலாம்.

நடப்பு ஆண்டில் ஐ.சி.ஐ.சி.ஐ. லம்பாடு மூலம் கரீப் பருவத்தில் ஜூலை முதல் டிசம்பர் 2010 வரை காப்பீடு செய்திருந்த நெல்

பயிர்களுக்கு இழப்பீடு தொகையாக மரக்காணம்,திருநாவலூர், சின்னசேலம், சங்கராபுரம், செஞ்சி, வானூர் மற்றும் மைலம் ஒன்றியத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு வழங்க ரூ.6 லட்சம் முன்னோடி வங்கி மேலாளரிடம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் விபரங்களுக்கு தங்கள் வட்டார வேளாண்மைத்துறை அலுவலர்கள், தோட்டக்கலைத் துறை அலுவலர்கள், மற்றும் சேவைப்பகுதி வங்கியாளர்களை அணுகி விவரம் தெரிந்து பயன்பெறலாம்.

**டெல்டா பகுதிகளில் சம்பா நெல் அறுவடைப் பணி மந்தம்**

த.தேவராஜ்

First Published : 30 Jan 2011 12:05:00 AM IST

தற்போது 50 ஆயிரம் ஏக்கருக்கு மேல் நெல், அறுவடைக்குத் தயாராக இருந்த போதிலும் இதுவரை, 20 ஆயிரம் ஏக்கரில் மட்டுமே அறுவடை நடந்து உள்ளதாக விவசாயிகள்

தெரிவிக்கிறார்கள். கடலூர் மாவட்டத்தில் போதுமான அளவு அறுவடை இயந்திரங்கள் இல்லை. அறுவடை இயந்திரங்களுக்கு சேலம், விழுப்புரம், ஈரோடு போன்ற மாவட்டங்களையே கடலூர் நம்பி இருக்கும் நிலை உள்ளது. கடலூர் வேளாண் பொறியியல் துறையில் 3 அறுவடை இயந்திரங்கள் உள்ளன. இவற்றில் விவசாயிகள் அதிகமாக எதிர்பார்க்கும் பெல்ட் மாடல், இயந்திரம் ஒன்றுகூட இல்லை.

கடலூர், ஜன. 29: கடலூர் மாவட்ட காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில், சம்பா நெல் அறுவடை மந்தமாக நடந்து வருகிறது.

÷கடலூர் மாவட்டத்தில் 1.42 லட்சம் ஏக்கர் டெல்டா பகுதிகள் உள்ளிட்ட, 2.5 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் நடவு செய்யப்பட்டு இருந்தது. தற்போது காட்டுமன்னார்கோவில், வடவாறு பாசனப் பகுதிகள், ஸ்ரீமுஷ்ணம், வீராணம் பாசனப் பகுதிகளில் நெடுஞ்சேரி, புத்தூர், திட்டக்குடி, பெண்ணாடம் பகுதிகளில், 10 நாள்களாக அறுவடை நடந்து வருகிறது. கடலூர் மாவட்டத்தில் வடகிழக்குப் பருவ மழை அதிகம் பெய்ததால், நெல் மகசூல் பாதிக்கப்பட்டு இருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

÷தற்போது 50 ஆயிரம் ஏக்கருக்கு மேல் நெல், அறுவடைக்குத் தயாராக இருந்த போதிலும் இதுவரை, 20 ஆயிரம் ஏக்கரில் மட்டுமே அறுவடை நடந்து உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

÷கடலூர் மாவட்டத்தில் 110 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் திறக்கப்பட்டு உள்ளன. இவற்றில் பாதி கடந்த 10-ம் தேதியும், மற்றவை 19-ம் தேதியும் இயங்கத் தொடங்கின. இவற்றில் வியாழக்கிழமை வரை, 4,027 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு இருப்பதாக, நுகர்பொருள் வாணிபக் கழகம் தெரிவிக்கிறது.

÷ஏற்கெனவே வேளாண் வேலைகளுக்கு, ஆள் பற்றாக்குறை இருந்து வருகிறது. இதனால் அறுவடைக்கு போதிய ஆள்கள் கிடைக்கவில்லை, ஆள்கள் கிடைத்தாலும் நெல் மகசூலில் பாதியைக் கூலியாக கேட்கிறார்கள் என்றும் விவசாயிகள் கூறுகின்றனர். எனவே இயந்திரம் மூலம் அறுவடை செய்வதைத் தவிர விவசாயிகளுக்கு வேறு வழியில்லை.

÷பெருமளவு வேளாண்மையை நம்பி இருக்கும் நிலையிலும், கடலூர் மாவட்டத்தில் போதுமான அளவு அறுவடை இயந்திரங்கள் இல்லை. அறுவடை இயந்திரங்களுக்கு சேலம், விழுப்புரம், ஈரோடு போன்ற மாவட்டங்களையே கடலூர் நம்பி இருக்கும் நிலை உள்ளது. ÷கடலூர் வேளாண் பொறியியல் துறையில் 3 அறுவடை இயந்திரங்கள் உள்ளன. இவற்றில் விவசாயிகள் அதிகமாக எதிர்பார்க்கும் பெல்ட் மாடல், இயந்திரம் ஒன்றுகூட இல்லை. டயர் மாடல் அறுவடை இயந்திரங்கள் மூலம் நெல் அறுவடை செய்தால், ஊடுபயிராக விதைக்கப்பட்டு இருக்கும் உளுந்து, பயறு வகைகள் அதிகம் சேதம் அடைந்து விடும். பெல்ட் மாடலாக இருந்தால் சேதம் மிகக்குறைவாக இருக்கும் என்கிறார்கள் விவசாயிகள்.÷பிற மாவட்டங்களில் இருந்து தருவிக்கப்பட்டது உள்பட, கடலூர் மாவட்டத்தில் 6 அரசு அறுவடை இயந்திரங்கள், இயங்கிக் கொண்டு இருக்கின்றன.

÷இவற்றில் ஒன்று மட்டும் பெல்ட் மாடல். தனியார் அறுவடை இயந்திரங்கள் சுமார் 40 வந்துள்ளன. இடைத்தரகர்கள் மூலம் இயக்கப்படும் இவற்றுக்கு அறுவடைக் கட்டணம் மணிக்கு, பெல்ட் மாடலுக்கு ரூ.2,300-ம், டயர் மாடலுக்கு 1,500 வசூலிக்கிறார்கள். அரசு வேளாண் துறை அறுவடை இயந்திரங்களுக்கு கட்டணம் மணிக்கு, டயர் மாடலுக்கு ரூ. 805. பெல்ட் மாடலுக்குக் ரூ. 1,215.

÷கடந்த 21-ம் தேதி விவசாயிகள் குறைகேட்கும் கூட்டத்தில் பேசிய விவசாயிகள், வேளாண் துறை கூடுதல் அறுவடை இயந்திரங்களை வரவழைக்க வேண்டும், தனியார் இயந்திரங்களின் வாடகையைக் குறைக்க பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்றும் கோரினர். இதற்கு ஒப்புதல் தெரிவித்த அதிகாரிகள், தொடர் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

÷அறுவடைக்கு ஆள் பற்றாக்குறை, அரசு இயந்திரங்கள் பற்றாக்குறை, தனியார் இயந்திரங்களில் அதிகக் கட்டணம் காரணமாக, அறுவடை மிகவும் மந்தமாக நடந்து வருவதாக விவசாயிகள் கூறுகின்றனர். இந்த நிலையில் தற்போது நெல் விலையும் வீழ்ச்சி அடைந்துள்ளது, விவசாயிகளைச் சோர்வு அடையச் செய்துள்ளது.

÷இதுகுறித்து மாவட்ட உழவர் மன்றங்களில் கூட்டமைப்பின் தலைவர் பி.ரவீந்திரன் கூறுகையில், தற்போது 50 ஆயிரம் ஏக்கருக்கு மேல் சம்பா நெல் அறுவடைக்குக் காத்து இருக்கும் நெல்லில் பாதிகூட, இன்னமும் அறுவடை ஆகவில்லை. கை அறுவடைக்கு ஆள்கள் கிடைக்கவில்லை. அரசு அறுவடை இயந்திரங்களும் தேவையான அளவுக்கு தருவிக்கப்படவில்லை. 40-க்கும் மேற்பட்ட தனியார் அறுவடை இயந்திரங்களை தயாராக இருந்த

போதிலும், நெல்லுக்கு உரிய விலை கிடைக்காததால், கூடுதல் கட்டணம் கொடுத்து தனியார் இயந்திரங்களைப் பயன்படுத்த விவசாயிகள் தயக்கம் காட்டி வருகிறார்கள்.
÷உடனடியாக பிற மாவட்டங்களில் இருந்து, அரசு அறுவடை இயந்திரங்களைத் தருவிக்க வேண்டும். தனியார் அறுவடை இயந்திரங்களின் உரிமையாளர்களுடன் பேசி, கட்டணத்தைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

**முட்டை விலை**

First Published : 30 Jan 2011 11:30:02 AM IST

நாமக்கல், ஜன. 29: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு வியாழக்கிழமை அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ. 2.47, சென்னையில்
ரூ. 2.58.
கறிக்கோழி விலை
பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு வியாழக்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.51, முட்டைக் கோழி கிலோ ரூ. 26.

**100 விவசாயிகளுக்கு விதை கிராம திட்டப் பயிற்சி**

First Published : 30 Jan 2011 11:06:45 AM IST

Last Updated : 30 Jan 2011 12:39:50 PM IST

உளுந்தூர்பேட்டை, ஜன. 29: விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் வேளாண்மை துறையின் சார்பில் மேல்தனியாளம்பட்டு கிராமத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 விவசாயிகளுக்கு விதை கிராம திட்டப் பயிற்சி புதன்கிழமை அளிக்கப்பட்டது.
இப் பயிற்சியில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ரத்தினசபாபதி கலந்துகொண்டு தலைமையுரையாற்றினார்.
அதில் அவர், விவசாயத் தொழில்நுட்பங்களை அறிந்து அவற்றை பயன்படுத்தி குறைந்த செலவில் கூடுதல் மகசூல் எடுத்து லாபம் அடையும் வழிமுறைகளை குறித்து பேசினார்.
திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் நடராஜன், ராஜராஜன் 1000 நெல் சாகுபடி முறையை பயன்படுத்தும் வழிமுறைகளை கணினி வழி பட விளக்கவுரை மூலம் தெளிவாக எடுத்துரைத்தார்.
திருவெண்ணெய்நல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் பா.தேவநாதன், உளுந்து பயிரில் உயர் சாகுபடி தொழில்நுட்பங்களையும், விதைப்பு, களையெடுப்பு மற்றும் அறுவடை ஆகியவற்றை

இயந்திர முறையில் செய்வது தற்போதைய விவசாய ஆட்கள் தட்டுப்பாட்டில் விவசாயிகளுக்கு லாபகரமானதாக இருக்கும் என்பதை விளக்கிக்கூறினார்.

திருக்கோவிலூர் விதைச்சான்று அலுவலர் சண்முகம், ஊராட்சி மன்றத் தலைவர் தேவநாதன் உட்பட பலர் பயிற்சியில் கலந்துகொண்டு பயன்பெற்றனர். துணை வேளாண்மை அலுவலர் பிரசன்னராஜ் வரவேற்றார். உதவி வேளாண்மை அலுவலர் பாரி நன்றி கூறினார்.

**ரப்பர் விலை சரிவு**

First Published : 30 Jan 2011 02:27:54 PM IST

குலசேகரம், ஜன. 29: ரப்பர் விலை கடந்த இரு தினங்களாக சரிவைச் சந்தித்து வருகிறது.

கோட்டயம் சந்தையில், ஆர்.எஸ்.எஸ். 4 தர ரப்பரின் விலை கடந்த வாரம் 234 ஆக உயர்ந்திருந்தது. இந்நிலையில் செவ்வாய்க்கிழமை முதல் இந்த விலை சரிந்து வருகிறது.

வெள்ளிக்கிழமை கோட்டயம் சந்தையில், ஆர்.எஸ்.எஸ். 4 தர ரப்பரின் விலை கிலோ ரூ. 224 ஆகக் குறைந்திருந்தது. தரம்பிரிக்கப்படாத ரப்பரின் விலை கிலோ ரூ. 211.50 ஆகவும் குறைந்திருந்தது.

சர்வதேச சந்தையிலும் சரிவு:

சர்வசேத சந்தையான பாங்காங் சந்தையில் கடந்த வாரம் கிலோ ரூ. 266 ஆக இருந்த ஆர்.எஸ்.எஸ். 3 தர ரப்பரின் விலை, வெள்ளிக்கிழமை கிலோ ரூ. 261 ஆகக் குறைந்தது. ரப்பர் விலைக் குறைவுக்கு கச்சா எண்ணெயின் திடீர் விலை சரிவு உள்ளிட்ட காரணங்கள் உள்ளதாக ரப்பர் வணிகர்கள் தெரிவித்தனர்.

**புதிய நுண்ணூட்டம் "பயறுஒன்டர்' பிப்.1-ல் அறிமுகம்**

First Published : 30 Jan 2011 10:44:27 AM IST

ஆலங்குடி, ஜன. 29: ஆலங்குடி அருகேயுள்ள வம்பனில் "பயறுஒன்டர்' என்ற புதிய நுண்ணூட்டம் பிப்.1-ல் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதுகுறித்து வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தின் தலைவர் சின்னையன் கூறியது:

வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் பிப்.1-ம் தேதி பயறு சாகுபடியில் வறட்சியைத் தாங்கி, 20 சதம் அதிக மகசூலைத் தரக்கூடிய "பயறுஒன்டர்' எனும் புதிய நுண்ணூட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. மேலும், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த நுண்ணுட்டத்தின் செயல் விளக்கப் பயிற்சியும் இலவசமாக அளிக்கப்படுகிறது. எனவே, பயறு சாகுபடி செய்யும் விவசாயிகள் இந்தப் பயிற்சியில் கலந்துகொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 04322- 290321 என்ற எண்ணைத் தொடர்புகொள்ளலாம் என்றார் அவர்.

தினமலர்

## மலர் கண்காட்சி கோவையில் துவக்கம்

பதிவு செய்த நாள் : ஜனவரி 30,2011,00:46 IST

கோவை : "கோவை மலர் கண்காட்சி-2011', தமிழ்நாடு வேளாண் பல்கலை தாவரவியல் பூங்காவில் நேற்று துவங்கியது;நாளை நிறைவடைகிறது.

நேற்று நடந்த துவக்கவிழாவில் பல்கலை தோட்டக்கலைத்துறை டீன் குமார் வரவேற்றார். திட்ட தலைவர் முகமதுஅலி திட்ட அறிக்கை வாசித்தார். விழாவில், வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி தலைமை வகித்து பேசியதாவது: இக்கண்காட்சியில் ஹாலந்து, தாய்லாந்து, சிங்கப்பூர், நியூசிலாந்து போன்ற நாடுகளில் உள்ள அரிய வகை மலர்களை கொண்டு டச்சு அலங்காரக் கூடமும், இந்தியாவில் பயிராகும் கொய் மலர் மற்றும் உதிரி மலர்களைக் கொண்டு தனியாக ஒரு மலர் கூடமும் அமைக்கப்பட்டுள்ளது. கொய்மலர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு சமீப காலமாக நல்ல வளர்ச்சியை கண்டுள்ளது. பசுமை கூடார சாகுபடி, புதிய மலர் வகைகள் மற்றும் ரகங்கள்,சீரிய கையாளும் முறைகள் போன்ற பல்வேறு நிலைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தால் 1991-92ல் 15 கோடி ரூபாயாக இருந்த கொய் மலர் ஏற்றுமதி, கடந்த 2008-09ல் 600 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இத்துறையின் வளர்ச்சி விகிதம் சர்வதேச அளவில் 17 மற்றும் இந்தியாவில் 25 சதவீதமாகவும் உள்ளது. சர்வதேச அளவில் மலர் சாகுபடி பரப்பில் 29 சதவீதத்தை கொண்டு இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளது. முதல் இடத்தில் சீனா உள்ளது. பல்கலையில் பயன்படுத்தப்படும் தண்ணீர் மறுசுழற்சி செய்து பயன்படுத்தும் வகையில் புதிய திட்டம் விரைவில் செயல்படுத்த உள்ளோம். ஆங்கிலேயர் காலத்தில் 45 ஏக்கர் பரப்பளவில் பல்கலை அமைக்கப்பட்டது. 800 வகையான தாவரங்கள் உள்ளன. இவ்வாறு, துணைவேந்தர் முருகேசபூபதி பேசினார்.

தமிழக கதர் மற்றும் கிராம தொழில் வாரியத்துறை அமைச்சர் ராமச்சந்திரன், ஊரக தொழில்துறை அமைச்சர் பழனிச்சாமி, கலெக்டர் உமாநாத், வேளாண் பல்கலை பதிவாளர் சுப்பையன், ரோட்டரி கிளப் அப்டவுன் தலைவர் செந்தில்நாதன், ராஜ்குமார் உட்பட பலர் பங்கேற்றனர். மலர் கண்காட்சிக்கு பெரியவர்களுக்கு 10 ரூபாயும், சிறுவர்களுக்கு ஐந்து ரூபாயும் நுழைவுக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பார்வையாளர் நேரம்: காலை 9.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை.

**கால்நடை மற்றும் மீன் வளர்ப்பில் மாணவ, மாணவிகளுக்கு போட்டி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 31,2011,01:04 IST

மன்னார்குடி: தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை சார்பில் கால்நடை மற்றும் மீன்வள வாரவிழா திருவாரூர் உழவர் பயிற்சி மையத்தில் நடந்தது. விழாவை முன்னிட்டு, "கால்நடைகளுக்கும், கிராமப் பொருளாதாரமும்,' என்ற தலைப்பில் ஓவியப்போட்டி, வினாடிவினா போட்டி மன்னார்குடி பின்லே மேல்நிலைப்பள்ளியில் நடந்தது. திருவாரூர் மாவட்ட கல்வி அலுவலர் சுப்பிரமணியன் தலைமை வகித்தார். 35 பள்ளிகளின் மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு பயன்பெறும் வகையில் கால்நடை மற்றும் விவசாயம் சம்மந்தமான துறைகளில் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு என்ற தலைப்பில் திருவாரூர் உழவர் பயிற்சி மைய பேராசிரியர் தங்கதமிழ்வாணன் பேசினார். வினாடிவினா போட்டியில் மன்னார்குடி ஆதிபராசக்தி பள்ளி முதலிடம், மரக்கடை பஞ்சாயத்து ஒன்றிய நடுநிலைப்பள்ளி இரண்டாமிடம், நெடுவாக்கோட்டை பஞ்சாயத்து ஒன்றிய நடுநிலைப்பள்ளி மூன்றாமிடம் பெற்றது. ஓவியப்போட்டியில் மன்னார்குடி கோபாலசமுத்திரம் நடுநிலைப்பள்ளி, மூவாநல்லூர் அரசு உயர்நிலைப்பள்ளி, உள்ளிக்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளி முதல் மூன்று இடங்களை பெற்றனர். வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள், சான்றிதழ் வழங்கப்பட்டது. சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர் பண்டரிநாதன், டாக்டர் பாலகிருஷ்ணன், பின்லேப்பள்ளி தலைமை ஆசிரியர் ஜோசப், உதவி தொடக்க கல்வி அலுவலர் மெய்யப்பன் ஆகியோர் பேசினர். ஏற்பாடுகளை பயிற்சி மைய உதவி பேராசிரியர் கதிர்செல்வன் செய்திருந்தார்.

**ராஜபாளையம், சேத்தூரில் நெல் கொள்முதல் மையம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 31,2011,02:43 IST

ராஜபாளையம் : ராஜபாளையத்தில் நெல் கொள்முதல் மையம் அமைக்க ஆலோசனை கூட்டம், வேளாண் பொருட்கள் விற்பனை சங்க தனி அதிகாரி செங்குட்டுவன் தலைமையில் நடந்தது. தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் ராமச்சந்திர ராஜா, மாவட்ட செயலாளர் அம்மையப்பன், நகர் செயலாளர் முருகேசன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

பின், 17 சதவீத ஈரப்பதம் மற்றும் கிரேடு 1 ரக நெல், குவிண்டாலுக்கு 1,100 ரூபாய், பொதுரகத்திற்கு 1,050 ரூபாய் விலையில் கொள்முதல் செய்தல், கொள்முதல் அன்றே பணம் பட்டுவாடா செய்தல், மற்றும் ராஜபாளையம், சேத்தூரில் கொள்முதல் மையம் அமைக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

**மல்லிகை, முந்திரி சாகுபடிக்கு ஊக்கம் : இலவச கன்றுகள் தயார்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 31,2011,02:31 IST

சிவகங்கை : குண்டு மல்லிகை, முந்திரி சாகுபடியை பெருக்க, தோட்டக்கலைத்துறை மூலம் இலவச கன்றுகள் வழங்கப்பட உள்ளது.

மல்லிகைப்பூ போதிய விளைச்சல் இல்லாததால், சில நேரங்களில் விலை (கிலோவிற்கு) 900 முதல் 1,000 ரூபாய் வரை உயர்கிறது. இதனால் அதன் உற்பத்தியை பெருக்க அரசு உத்தரவிட்டுள்ளது. நடப்பாண்டு (2010-2011) தேசிய தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில், மல்லிகைப்பூ நடவை அதிகரிக்கும் முயற்சியில் தோட்டக்கலை துறை இறங்கியுள்ளது.

இதற்காக, ஒரு எக்டேருக்கு 1,500 மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படும். சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை, நேமம் தோட்டக்கலை பண்ணையில் இரண்டு லட்சம் மல்லிகை கன்றுகள் இருப்பு வைக்கப்படும். கன்னியாகுமரி, சேலம் மாவட்ட தோட்டக்கலை பண்ணைகளிலும் மல்லிகை கன்றுகள் பதியம் தயாரிக்கும் பணி துவங்கியுள்ளது. சிவகங்கை மாவட்ட தேவை போக எஞ்சிய கன்றுகள் தூத்துக்குடி, திருவண்ணாமலை, அரியலூர் மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

முந்திரி: நேமம் பண்ணையில் 4.5 லட்சம் முந்திரி கன்றுகள் உற்பத்தி செய்யப்படும். எக்டேருக்கு 200 கன்றுகள் இலவசமாக தரப்படும். அதன்படி, சிவகங்கை மாவட்ட விவசாயிகளுக்கு 1.85 லட்சம் கன்றுகள்; அரியலூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, ராமநாதபுரம் மாவட்டத்திற்கு 2.15 லட்சம் கன்றுகள் வழங்கப்படும்.

தோட்டக்கலை துணை இயக்குனர் இருளப்பன், உதவி இயக்குனர் (பண்ணையம்) வெங்கடேஷ்வரன் கூறுகையில், "மற்ற மாவட்டங்களுக்கு இங்கிருந்து மல்லிகை நாற்று, முந்திரி கன்றுகளை உற்பத்தி செய்து, இலவசமாக வழங்க உள்ளோம். இதற்கு தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை தோட்டக்கலைதுறை அலுவலர்கள் வழங்குவர். மணல், செம்மண் நிலங்களில் நடவு செய்ய பரிந்துரைப்போம்,' என்றனர்.

**விவசாயத்திற்கு ஏரி நீரை பகிர்ந்து கொள்ளும் வழக்கம் : மன்னர்கள் காலத்தை பின்பற்றும் கிராம மக்கள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 31,2011,02:46 IST

என்.எ.கேசவன் / செங்கல்பட்டு : பொன்விளைந்த களத்தூர் ஏரி தண்ணீரை, விவசாய நிலங்களுக்கு சமமாக பகிர்ந்து கொள்ளும் வழக்கத்தை, இந்த கிராம மக்கள் இன்றும் பின்பற்றி மற்ற கிராமங்களுக்கு முன் மாதிரியாக உள்ளனர்.
உலகம் முழுவதும் தண்ணீர் பிரச்சனை அதிகரித்து வருகிறது. நமது நாட்டில் மாநிலங்களுக்கிடையே நதி நீர் பங்கீடு முறையாக நடக்காத காரணத்தால், நாட்டில் ஒரு பகுதி வளமாகவும், மற்றொரு பகுதி வறட்சியாகவும் உள்ளது. இந்நிலையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிராம மக்கள் பழங்கால முறைப்படி தண்ணீரை முறையாக பங்கிட்டு விளை நிலங்களுக்கு பாய்ச்சுகின்றனர்.

செங்கல்பட்டிலிருந்து 10 கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது பொன்விளைந்த களத்தூர் கிராமம். இங்கு சேக்கிழார் பாடல் பெற்ற முன்குடுமீஸ்வரர் கோவில், லஷ்மி நரசிம்ம பெருமாள் கோவில், சேதுராமர் சன்னிதியுடன் கூடிய கோதண்டராமர் கோவில் உள்ளது. புகழேந்தி புலவர், படிக்காசு தம்பிரான், அந்தகக்கவி வீரராகவ முதலியார் போன்ற தமிழ் புலவர்கள் பிறந்த ஊர். இந்த கிராமத்தின் வடகிழக்கில் பழமையான களத்தூர் ஏரி 1,500 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. ஏரி தண்ணீரை நம்பி பொன்விளைந்த களத்தூர், உதயம்பாக்கம், ஆலவாய், ஆனூர், கொல்லமேடு, புன்னப்பட்டு, மணப்பாக்கம், கோரப்பட்டு, வெண்பாக்கம், சாலூர், எலுமிச்சம்பட்டு, வல்லிபுரம் உட்பட 19 கிராமங்ளைச் சேர்ந்த விவசாயிகள் உள்ளனர். 5,200 ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. கோடையில் ஏரி வறண்டு விவசாயம் பாதிக்கப்பட்டது.

செயற்கை கால்வாய்: வாலாஜாபாத் அடுத்த தென்னேரி ஏரியிலிருந்து வெளியேறும் உபரி நீர் செல்லும் நீஞ்சல் மடுவு செங்கல்பட்டு அடுத்த பழவேலி அருகே பாலாற்றில் கலக்கிறது. 24 கி.மீ., தூரம் கொண்ட மடுவில் வழியில் உள்ள பல்வேறு ஏரி உபரி நீர் கலப்பதால் பல மாதங்களுக்கு தண்ணீர் ஓடும். வீணாக பாலாற்றில் கலக்கும் தண்ணீரை விவசாயத்திற்கு பயன்படுத்த ஆங்கிலேயர் காலத்தில் முடிவு செய்யப்பட்டது. 1941ல் நீஞ்சல் மடு குறுக்கே அணை கட்டப்பட்டது. அங்கிருந்து பி.வி.களத்தூர் ஏரிக்கு செயற்கை கால்வாய் வெட்டப்பட்டு தண்ணீர் கொண்டு செல்லப்பட்டது. அணை உடைந்து 20 ஆண்டுகளுக்கும் மேலாக சரி செய்யப்படாததால் நீஞ்சல் மடுவு தண்ணீர் ஏரிக்கு செல்லவில்லை. மழைக்காலத்தில் ஏரியில் தேங்கும் தண்ணீரை மட்டுமே விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். தண்ணீரை அனைத்து விவசாய நிலங்களும்

பயன்பெறும் வகையில், முறையாக பிரித்து வயல்களுக்கு பாயவிடுவதற்காக மன்னர் கால முறைப்படி மடைகள் பராமரிப்பு தலைவரை பி.வி.களத்தூர் மக்கள் தேர்வு செய்கின்றனர். இந்த முறை தொன்றுதொட்டு பின்பற்றப்படுகிறது. ஏரி நிரம்பினால் காணும் பொங்கலன்று ஏரிக்கரை அருகில் உள்ள கிராம தேவதையான பிடாரி மல்லீஸ்வரியம்மன் கோவில் வளாகத்தில் பொதுமக்கள் கூட்டம் நடைபெறும். அப்போது ஒருவரை தலைவராக தேர்வு செய்து மடைகளைப் பராமரிக்கும் பொறுப்பை ஒப்படைப்பர்.
பின்னர் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், தீபாராதனை நடந்தது. கோவில் மண்டபத்தில் விவசாயிகள் முன்னிலையில் கிராம நாட்டாமை அரிகிருஷ்ண நாட்டார், தாம்பூலம் மற்றும் மண்வெட்டி வழங்கி ஏரி மடைகளை பராமரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்படும்.

சமீபத்தில் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமாள், உடன் செயல்பட மடைக்கு ஒருவரை தேர்வு செய்வார். அவர்கள் மடைகளை வெட்டி வயலுக்கு தண்ணீர் பாயவிடும் வேலையை மேற்கொள்வர். வயல்களில் பயிர் விளைந்து அறுவடை முடிந்ததும் நில உரிமையாளர்களிடமிருந்து ஒரு காணி (133 சென்ட்) நிலத்திற்கு 12 மரக்கால் நெல் வீதம் வசூலித்து மடைகளை பராமரிப்போர் சமமாக பங்கிட்டுக் கொள்வர். இத்தகைய முறையை அனைத்து பகுதிகளிலும் பின்பற்றினால் தண்ணீர் பிரச்சனை ஏற்பட வாய்ப்பில்லை.

**மேட்டூர் அணை மூடப்பட்டதால் வறண்டது காவிரி!**

பதிவு செய்த நாள் : ஜனவரி 31,2011,02:14 IST

ஈரோடு: மேட்டூரில் டெல்டா பாசனத்துக்கு திறக்கப்பட்ட தண்ணீர் நிறுத்தப்பட்டதை அடுத்து, ஈரோடு காவிரியாறு வறண்டது. ஈரோடு மாநகராட்சி உள்பட குடிநீர் திட்டங்கள் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.மேட்டூர் மற்றும் பவானிசாகர் அணைகளில் இருந்து திறக்கப்படும் தண்ணீர்தான், ஈரோடு காவிரியாற்றின் நீராதாரம். திருப்பூர், ஈரோடு மாநகராட்சிகள், பவானி, சூரம்பட்டி, காசிபாளையம், வீரப்பன்சத்திரம், பெரியசேமூர் நகராட்சிகள், ஈரோடு, நாமக்கல், திருப்பூர் மாவட்டங்களில் உள்ள ஏராளமான கிராமங்களின் குடிநீர் தேவையை, காவிரியாறு பூர்த்தி செய்கிறது. ஈரோடு மாநகராட்சி பகுதிக்கு தினமும் சராசரியாக 15 முதல் 20 லட்சம் லிட்டர் தண்ணீர் மோட்டார் மூலம் உறிஞ்சி எடுக்கப்படுகிறது.மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்துக்காக திறக்கப்படும் தண்ணீர் ஜனவரி 28ல் நிறுத்தப்பட்டது. பவானிசாகர் அணையிலிருந்து, நேற்று ஆற்றில் 500 கன அடி தண்ணீர் மட்டுமே திறக்கப்பட்டதால், காவிரியாறு வறண்டு போனது.

ஈரோடு வலதுகரையிலுள்ள தோல், சாயக்கழிவு ஆலைகளிலிருந்து திறக்கப்படும் கழிவுநீர் கறுப்பு நிறத்தில் காவிரியாற்றில் ஓடியது. இடது கரையில் பிளீச்சிங் பட்டறைகளில் தயாராகும் துணிகள் அலசப்படுவதால், இடது கரை பகுதியிலும் சாயக்கழிவு நீரின் தாக்கம் அதிகமாக இருந்தது. தண்ணீர் வரத்து முற்றிலும் குறைந்ததால், ஈரோடு மாநகராட்சியில் நேற்றும், இன்றும் குடிநீர் விநியோகம் முற்றிலும் நிறுத்தப்பட்டது.ஆற்றில் மழைக்காலத்தில் வெள்ளம் ஓடிய போது, ஈரோடு மாநகராட்சி நிர்வாம் குடிநீருக்காக ஆற்றில் அமைக்கப்பட்ட தொட்டிகளில் ஐந்து அடி வரை மணல் தேங்கியது. மணலை அகற்றி, தொட்டிகளில் கூடுதலாக குழாய்களை இணைத்து தண்ணீர் எடுக்கும் பணியை மாநகராட்சி நிர்வாகம் துவக்கியுள்ளது. நேற்று காலை முதல் தொட்டிகளுக்குள் இறங்கி தொழிலாளர்கள் மணலை அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.இது குறித்து அதிகாரி ஒருவர் கூறியாவது:ஆற்றில் தண்ணீர் வரும் காலங்களில், குடிநீர் எடுப்பதுக்காக அமைக்கப்பட்ட தொட்டிகளில் தேங்கியுள்ள மண்ணை அகற்ற முடியாது.

தற்போது ஆறு வறண்டதால், தொட்டியில் மண்ணை அகற்றி சுத்திகரிக்கிறோம். ஒரு முறை அகற்றிவிட்டால், மீண்டும் அடுத்த ஆண்டு மண்ணை அகற்றினால் போதும். வலதுகரை பகுதிகளில் சாய, தோல் கழிவுநீர் அதிகமாக வருவதால், குடிநீர் தொட்டிகளுக்கு இடது கரையிலிருந்து கரை அமைத்து, ஆற்றில் தனியாக கான்கிரீட் வாயக்கல் அமைத்து கொண்டுவந்து தொட்டியில் தண்ணீர் சேர்த்து விநியோகித்தோம். தற்போது, இடது கரையிலும் பிளீச்சிங் செய்யப்படும் துணிகள் அலசப்படுவதால், அங்கும் தண்ணீர் மோசமாகத்தான் வருகிறது. அணையிலிருந்து தண்ணீர் திறந்தால் மட்டுமே குடிநீர் விநியோகிக்க முடியும். மாலை வரை பராமரிப்பு பணி நடக்கிறது.அணையிலிருந்து அடுத்த இரண்டு நாட்களில் தண்ணீர் திறக்கப்படும் என எதிர்பார்க்கிறோம். பொதுமக்கள் குடிநீரை காய்ச்சி குடிக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

**கி.புரத்தில் விவசாயிகளுக்கு அடையாள அட்டை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 31,2011,00:44 IST

லாலாப்பேட்டை: கிருஷ்ணராயபுரத்தில் தோட்டக்கலைத்துறை மூலம் விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டது. கிருஷ்ணராயபுரம் தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் வழங்கி பேசுகையில், ""விவசாயிகள் சாகுபடி செய்யும் மலர், வெற்றிலை பயிர்களுக்கு 50 சதவீத மானிய விலையில் இடுபொருள் வழங்கப்படுகிறது. செண்டுமல்லி, சம்பங்கி, வெற்றிலை, திசுவாØ ழ சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தங்களது நிலத்தின் சிட்டா அடங்கல், ரேஷன் கார்டு நகல், ஃபோட் டோ ஆகி ய ஆவணங்களை கொ ண்டு வந்து தோட்டக்கலை அலுவலர்களை அணுகி மானிய விØ லயில் இடுபொருள்களை பெற்றுக்கொள்ளலாம்," என்றார்.

தோட்டக்கலை அலுவலர் கலா, தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், சொட்டு நீர்பாசனம் ந ன்மை குறித்து விளக்கினார். வி ழாவில் மலர் சாகுபடி செய்து ள்ள விவசாயிகளுக்கு அடையா ள அட்டை வழங்கப்பட்டது.

### பிப். 7 முதல் பால் உற்பத்தியாளர்கள் போராட முடிவு

பதிவு செய்த நாள் : ஜனவரி 31,2011,02:43 IST

திருச்சி:தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நல சங்கம், தமிழக விவசாயிகள் சங்கம் உள்ளிட்ட சங்கங்கள் சார்பில், பால் நிறுத்தப் போராட்ட விளக்க சிறப்பு கூட்டம், திருச்சியில் நேற்று நடந்தது.கூட்டத்துக்குப் பின், பால் உற்பத்தியாளர் சங்க மாநிலத் தலைவர் செங்கோட்டுவேல், நிருபர்களிடம் கூறியதாவது:தமிழக அரசு பசும்பால் லிட்டருக்கு 15.54 ரூபாயிலிருந்து ஐந்து ரூபாய் உயர்த்தி 20.5 ரூபாயாகவும், எருமைப் பால் லிட்டருக்கு 23 ரூபாயிலிருந்து எட்டு ரூபாய் உயர்த்தி, 31 ரூபாயாகவும் வழங்க வேண்டும். பால் லிட்டருக்கு நான்கு ரூபாய் மானியம் வழங்க வேண்டும். இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி, பிப்., 7 முதல் தொடர்ந்து பால் நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட உள்ளோம்,என்றார்.

### விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி முகாம்

பதிவு செய்த நாள் : ஜனவரி 31,2011,00:19 IST

தர்மபுரி: அறுவடைக்குப் பின், விளை பொருட்களை தரம் பிரிப்பது மற்றும் அரசு சேமிப்பு குடோன்களுக்கு விற்பனை செய்யும் பொருட்களுக்கு கூடுதல் விலை பெறுவது குறித்து, தர்மபுரி வேளாண் வணிகம் சார்பில் விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி வழங்கியது. பயிற்சி முகாமில் மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனர் மேலாளர் லோகநாதன் வரவேற்றார். வேளாண் இணை இயக்குனர் துரைசாமி துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் மேகநாதன் பேசியதாவது: மத்திய அரசின் சேமிப்பு வளர்ச்சி மற்றும் ஒழுங்குபடுத்தல் சட்டம் தற்போது அமலாக்கப்பட்டுள்ளதால், விவசாயிகளுக்கு மிகவும் பயன்தரத்தக்க வகையில் கிடங்கு ரசீது மாற்று முறை ஆவணமாக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு பல நன்மைகள் ஏற்பட சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, வியாபாரிகள், வங்கிகள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்களுக்கு இந்த சட்டத்தில் நன்மை செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் நுகர்வோர் விவகாரம், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம் மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவன செயல்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சியளிக்க உத்தரவிட்டுள்ளது. இந்த சட்டத்தினால்

விவசாயிகள் குறைந்த விளைபொருகளுக்கும் அதிக லாபம் பெறமுடியும். கிராமபுறங்களில் விளைபொருளின் நிதிவரம்பை உயர்த்துதல், விஞ்ஞான முறையில் பொருட்களை சேமிப்பதன் மூலம் பயனைடைதல், தரம் பிரித்தலுக்கும் தரம் உயர்ந்த அளவில் நிதி வழங்குவது குறித்து தமிழகத்தில் திருச்சி, தஞ்சை உள்ளிட்ட மாவட்டங்களில் 967 விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார். முகாமில், தர்மபுரி மாவட்டத்தில் 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர். பயிற்சியில் கிடங்கு ரசீது பெறுவது, விவசாயப் பொருட்களை தரம் பிரித்தல் மற்றும் சேமிப்பு கிடங்கில் நடக்கும் பல்வேறு செயல்முறைகள் நேரிடையாக விவசாயிகளை அழைத்து செல்லப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. முகாமில் கலந்துகொண்ட விவசாயிகளுக்கு சான்றிதழ், ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு குவிண்டால் கொள்ளளவு கொண்ட துத்தநாக தகட்டால் செய்யப்பட்ட குதிர் பரிசாக வழங்கப்பட்டது. சென்னை மண்டல அலுவலக சேமிப்பு மற்றும் ஆய்வு அதிகாரி கருணாகரன், சீத்தாராமன், அமுதவள்ளி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**விவசாயிகள் சங்க கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 30,2011,23:17 IST

சங்கராபுரம் : தமிழ்நாடு விவசாயிகள் சங்க கூட்டம் சங்கராபுரத்தில் நடந்தது. சங்கராபுரம் வட்ட தலைவர் ரகமதுல்லா தலைமை தாங்கினார். கூட்டத்தில் புதிய வட்ட தலைவராக திருவேங்கடம், செயலாளராக தேவராஜன், பொருளாளராக குப்பன், துணை தலைவராக சூசை, வட்ட துணை செயலாளராக சரவணன் தேர்வு செய்யப்பட்டனர்.

**உழவர் சந்தைக்கு காய்கறிகள்: விவசாயிகளுக்கு வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 30,2011,01:25 IST

ஓசூர்: "ஓசூரில் இரண்டாவது உழவர்சந்தை விரைவில் திறக்கப்பட உள்ளது; இந்த உழவர்சந்தைக்கு விவசாயிகள் காய்கறிகளை கொண்டு வந்து விற்பனை செய்ய வேண்டும், ' என மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் லட்சுமிராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
அவர் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது நான்கு உழவர்சந்தைகள் செயல்படுகிறது. ஓசூர் நகரத்தில் பெருகி வரும் மக்கள் தொகை, காய்கறிகளை உற்பத்தி பெருக்கம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு இரண்டாவது உழவர் சந்தை திறக்கப்பட உள்ளது. இதற்காக ஓசூர் முனிதேவி நகர் பகுதியில் 22 லட்சத்து 50 ஆயிரம் செலவில் புதிய உழவர்சந்தை கட்டப்பட்டுள்ளது. இந்த உழவர்சந்தைக்கு சுற்றுவட்டார விவசாயிகள் தங்களுடைய காய்கறிகளை கொண்டு வந்து விற்பனை செய்ய வேண்டும். விவசாயிகள் காய்கறிகளை

விற்பனை செய்ய வேளாண்மை விற்பனை மற்றும் தோட்டக்கலைத்துறை அதிகாரிகளை அணுகி உழவர்சந்தை விற்பனை அடையாள அட்டைகளை பெற்று கொள்ளலாம். உழவர் சந்தையில் தினம் நியாயமான விலை நிர்ணயம், இடைத்தரர்கள் இன்றி நேரடியாக விற்பனை செய்வதால் நல்ல வருமானம் கிடைக்கும். அதனால், விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

**பயிர் பாதிப்பு இழப்பீடு வழங்க கோரிக்கை : குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 30,2011,01:23 IST

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெய்த தொடர் மழை காரணமாக முற்றிலும் பாதிப்படைந்த அவரை மற்றும் துவரை போன்ற பயிர்களுக்கு உரிய இழப்பீட்டு தொகை வழங்க வேண்டும்' என்று விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர் கூட்டம் கலெக்டர் அருண்ராய் தலைமையில் நடந்தது. கூடுதல் கலெக்டர் (வளர்ச்சி) லட்சுமி பிரியா, டி.ஆர்.ஓ., பிரகாசம், வேளாண் உதவி இயக்குனர் ராஜன், கலெக்டரின் நேர் முக உதவியாளர் (வேளாண்) நாச்சியப்பன், வேளாண் அலுவலர் பச்சையப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு:

கிருஷ்ணன்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அழிந்து வரும் வனங்களை பாதுகாக்க தேசிய மரம் வளர்ப்பு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் விவசாயிகள் தங்களது நிலத்தில் மரக்கன்றுகளை நட வனத்துறை மூலமாக இலவசமாக மரக்கன்றுகளை வழங்க வேண்டும்.

கலெக்டர் அருண்ராய்: தேசிய மரம் வளர்ப்பு திட்டத்தில் விவசாயிகளுக்கு மரக்கன்றுகளை வழங்க ஓசூர் வனக்கோட்டம் ஓசூர் சரகத்தில் 2,000 மரக்கன்றுகளும், கிருஷ்ணகிரி வனச்சரகத்தில் 5,000 மரக்கன்றுகள் உள்ளன. விவசாயிகள் சம்மந்தப்பட்ட வனச்சரகரை அணுகி இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

ராமகவுண்டர்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டிருந்த துவரை மற்றும் அவரையில் பூக்கள் பூக்கும் பருவத்தில் தொடர் மழை பெய்ததால் சாகுபடி முற்றிலும் தடைப்பட்டது. மேலும் நெல், கரும்பு, வாழை போன்ற பயிர்களும் மழையால் பாதிப்படைந்தது. எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டு தொகை வழங்க வேண்டும்.

ராஜன் (வேளாண் இணை இயக்குனர்): அரசு விதிகளின்படி மழை வெள்ள சேதங்களை வேளாண் துறை அதிகாரிகள் வருவாய் துறை அதிகாரிகளுடன் சேர்ந்து கூட்டு தலத்தணிக்கை

மேற்கொண்ட போது நிவாரணம் வழங்க தேவையான அளவு பாதிப்பு இல்லை என்று தெரிய வந்தது. இருப்பினும் மற்ற மாவட்டங்களில் வழங்கப்படுவது போன்று கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மழையினால் சேதமடைந்த அவரை மற்றும் துவரை விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க அரசுக்கு கருத்துரு அனுப்பப்படும்.

தர்மன்ராஜ்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விவசாயிகள் ஆடு மற்றும் மாடு வளர்ப்பதற்கு நபார்டு வங்கி மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் வழங்க வேண்டும்.

திருமாவளவன் (முன்னோடி வங்கி மேலாளர்): இது குறித்து மாவட்ட வங்கியாளர்கள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு அனைத்து வங்கிகளிலும் நபார்டு மூலம் ஆடு மற்றும் மாடு வாங்க கடன் வழங்கலாம் என்றும் வங்கியில் ஏற்கெனவே கடன் வாங்கி செலுத்தாதவர்களுக்கு கடன் வழங்க கூடாது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. உண்மையாக தொழில் தொடங்க ஆர்வம் உள்ளவர்களை கண்டறிந்து கடன் வழங்க நடவடிக்கை எடுக்கபப்ட்டு வருகிறது.

பெரியண்ணன்: மார்க்கண்டேய நதியில் இருந்து இரவு நேரங்களில் சட்ட விரோதமாக அதிக அளவில் லாரிகளில் மணல் கடத்தப்படுகிறது. இதனை அதிகாரிகள் கண்டுகொள்ளாமல் உள்ளனர். தொடர்ந்து மணல் கடத்தல் நடந்து வருவதால் நடுசாலை பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது.

லட்சுமி பிரியா (கூடுதல் கலெக்டர் வளர்ச்சி): மணல் கடத்தல் தொடர்பாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இந்த மாதம் மட்டும் ஆய்வு மேற்கொண்டு 10 லாரிகள் கைப்பற்றப்பட்டு வழங்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. நடுசாலை பகுதியில் இரவு நேரங்களில் சுரங்கத்துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் ஆகியோர் திடீர் ஆய்வு மேற்கொண்டு மணல் கடத்தல் தடுக்கப்படும். இவ்வாறு விவாதம் நடந்தது.

**பருத்தி அறுவடைக்கு பின் தொழில்நுட்பம் வேளாண் வணிக துறை அதிகாரி அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 30,2011,01:32 IST

தர்மபுரி: பருத்தி அறுவடைக்கு பின் செய்ய வேண்டிய தொழில் நுட்பங்கள் குறித்து வேளாண் வணிக துறை துணை இயக்குனர் நாகராஜன் அறிவுரை வழங்கியுள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில் பருத்தி பாலக்கோடு, மொரப்பூர், அரூர், நல்லம்பள்ளி, காரிமங்கலம், பென்னாகரம், தர்மபுரி, பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய வட்டாரங்களில் இறவை பாசன நிலங்களில் 3,567 ஏக்கரிலும், மானாவாரி நிலங்களில் 12,990 ஏக்கரிலும் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பருத்தி தற்போது அறுவடை துவங்கியுள்ள நிலையில் விவசாயிகள் பருத்தியை அறுவடைக்கு பின் தொழில் நுட்பங்களை கடைப்பிடித்து கூடுதல் வருவாய் பெற்று பயன் அடையலாம். பருத்தியில் அதிக விலை, அதன் சிறப்பு தன்மைகளான சுத்தத்தன்மை, நிறம், மென்மைத்தன்மை மற்றும் குறைவான ஈரம் ஆகிய நான்கு தன்மைகளை பொறுத்து அமைகிறது.

இந்த நான்கு தன்மைகளை பெற்றிட அறுவடைக்கு பின் செய்ய வேண்டிய தொழில் நுட்பங்களை விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டும்.
வெடித்து நன்கு மலர்ந்த பருத்தியை மட்டும் செடியில் இருந்து எடுக்க வேணடும். மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு ஒரு முறை பருத்தியை சேகரம் செய்ய வேண்டும். பருத்தியை காலை நேரங்களில் சேகரம் செய்வது சிறந்தது. காலை நேரங்களில் சேகரம் செய்வதால், காய்ந்த இலை, சருகுகள் பருத்தியில் ஒட்டாது. சேகரிக்கும் பருத்தியை நிழலில், மணல் பரப்பிய களங்களில் காயப்போட வேண்டும். நேரடி வெயிலில் பருத்தியை உலரபோட்டால் பஞ்சின் நிறும் குறைந்து விடுவதுடன் மென்னை தன்மை பாதிக்கும். பருத்தியை நன்கு உலர்த்திய பின் அதில் கலந்துள்ள இலைச்சருகுகள், காய்ந்த சப்பைத் துண்டுகள், பூச்சி நோய்க் தாக்கியது மற்றும் கொட்டு பருத்தி ஆகியவற்றை தனியாக பிரிக்க வேண்டும்.
பருத்தியை காற்றோட்டமான அறைகளில் மணல் பரப்பிய தரையில் சேமிக்க வேண்டும். பருத்தியை ரகம் வாரியாக தனித்தனியாக சேமிக்க வேண்டும். பருத்தி ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் உள்ள தரம் பிரிப்பு மையங்களில் "ஏ', "பி', "சி', "டி' என நான்கு தரங்களாக பிரிக்கப்படுகிறது. பருத்தி அறுவடைக்கு பின் தொழில் நுட்ப முறைகளை கடைப்பிடித்து விவசாயிகள் பருத்தியில் அதிக லாபம் பெறலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**"சீசன் இல்லாத பயிர்கள் சாகுபடி முறையை தெரிந்தால் விவசாயிகள் லாபம் பெறலாம்'**

பதிவு செய்த நாள் : ஜனவரி 30,2011,22:35 IST

பொள்ளாச்சி: "சீசன் கால பயிர்கள் மட்டுமின்றி சீசன் இல்லாத பயிர்களை சாகுபடி செய்யும் முறை விவசாயிகள் தெரிந்தால், அதிக லாபம் பெறலாம்' என, விவசாய கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது. பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லூரியில் விவசாய கருத்தரங்கம் நடந்தது. கோவை தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மைய வாசனை பயிர்கள் மற்றும் மலை தோட்ட பயிர்கள் துறை தலைவர் ஜான்சிராணி பேசியதாவது: தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு கோ-கோ சிறந்த ஊடுபயிராகும். தென்னை விவசாயத்தை மட்டும் நம்பி இருக்காமல், கோ-கோ போன்ற மற்ற பயிர்களை ஊடு பயிராக செய்யும் போது அதிக லாபம் பெறலாம். உலகளவில் கோ-கோவிற்கு அதிக தேவை உள்ளது. ஆனால், மூன்றில் ஒரு பங்கு மட்டுமே இந்தியாவில் கிடைக்கிறது. மீதமுள்ள இரண்டு பங்கு இறக்குமதி செய்யப்படுகிறது. கோ-கோ செடிகள் தற்போது அனைத்து பகுதிகளிலும் கிடைக்கிறது. இவற்றை பயிரிடும் விவசாயிகள், உதிர்ந்த இலைகளையே உரமாக பயன்படுத்தலாம், என்றார். பெரியகுளம் தோட்டகலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மைய முதல்வர் பொன்னுசாமி பேசியதாவது: தரமான பொருட்களை விளைவிப்பதில் ஆர்வம் காட்ட வேண்டும். காய்கறி சாகுபடி குறைந்து வருவதால், மக்களுக்கு தேவையான அளவை விட குறைந்த அளவு காய்கறி மட்டுமே கிடைக்கிறது. உற்பத்தியை பெருக்க புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும். கலப்பினங்களை

கொண்டு விவசாயம் செய்ய வேண்டும். முக்கியமாக சீசனுக்கு தகுந்த காய்கறிகளை மட்டும் சாகுபடி செய்யாமல், சீசன் இல்லாத காய்கறிகளையும் உற்பத்தி செய்ய வேண்டும், என்றார். தென்னை சாகுபடி குறித்து ஆழியார் ஆராய்ச்சி நிலைய தலைவர் ராஜமாணிக்கம் பேசினார்.

**விவசாயத்தில் புதிய தொழில்நுட்பங்களை புகுத்த யோசனை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 30,2011,22:34 IST

பொள்ளாச்சி: ""விவசாயத்தில், புதிய தொழில்நுட்பங்களை புகுத்தி, விளை பொருட்கள் உற்பத்தியை பெருக்கினால் மட்டுமே சமுதாயத்தில் நிலவும் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும்," என, மாநில திட்டக்குழு உறுப்பினர் குமாரவேல் கூறினார். பொள்ளாச்சி தொழில்வர்த்தக சபை சார்பில் விவசாய கருத்தரங்கு என்.ஜி.எம்., கல்லூரியில் நடந்தது. தொழில்வர்த்தக சபை துணைத்தலைவர் வெங்கடேஷ் வரவேற்றார். தலைவர் கோபாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். மாநில திட்டக்குழு உறுப்பினர் குமாரவேல் கூறியதாவது: இந்தியாவில், இன்றைய முக்கிய பிரச்னைகளில் ஒன்றாக விலைவாசி உயர்வு, சுகாதார பிரச்னை உள்ளது. இதை சரிசெய்ய பல்வேறு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால், சமீப காலமாக விவசாயம் செய்யும் பரப்பு குறைந்து கொண்டே செல்வது தான் முக்கிய காரணம். விவசாயத்தை மேம்படுத்த வேண்டும். பொருளாதாரம் நன்றாக இருந்தால் மட்டுமே மக்கள் சிந்திக்க முடியும். அதுபோன்ற சூழ்நிலை வளர வேண்டும். விவசாயத்திற்கு அடிப்படையான தண்ணீர் பற்றாக்குறையாக உள்ளது என்பது தெரிய வருகிறது. இதனால், புவி வெப்பமாகி வருகிறது. இதே நிலை நீடித்தால், இன்னும் சில ஆண்டுகளில் பல மாறுதல் ஏற்படும் வாய்ப்புள்ளது. இவற்றை கட்டுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். வனங்களை பாதுகாப்பதில் அக்கறை செலுத்த வேண்டும். வனத்தை சரிவர பாதுகாக்காததால், தண்ணீர் வளம் குறைந்து கொண்டே செல்கிறது. நாளுக்குநாள் தண்ணீர் வளம் குறைவதால், நுண்ணுயிர்கள் முழுவதும் அழியும் நிலை உள்ளது. சீரிய நில பயன்பாடும், சரியான திட்டமிடலும் இருக்க வேண்டும். விவசாயத்திற்கேற்ப மண்ணை தயார்படுத்தி, அந்த நிலத்திற்கு தகுந்த விதைகளை பயிரிடும் தொழில்நுட்பத்தை தெரிந்திருக்க வேண்டும். தமிழகத்தில், நான்கு சதவீத நில பரப்பும், மூன்று சதவீதம் தண்ணீரும் உள்ளது. இதில், 98 சதவீதம் கடல் நீராக உள்ளது. சுத்தமான தண்ணீரில், 52 சதவீதம் ஏரி, குளத்திலும், 38 சதவீதம் மண்ணிலும் உள்ளது. ஆற்றில் ஒரு சதவீதம் உள்ளது. இதை சரியாக பாதுகாத்து பயன்படுத்த தெரிந்திருக்க வேண்டும்.இந்தியாவை பொறுத்தவரை, தமிழகத்தில் ஐந்தாயிரத்து 640 மலரும் தாவரங்கள் உள்ளன. இதன்மூலம் மற்ற மாநிலங்களை விட இந்தியா முதலிடத்தில் உள்ளது. அதை முறையாக பாதுகாக்க தெரிந்திருக்க வேண்டும்.

விவசாயம் குறைந்து வருவதால், பெரும்பாலான கிராம மக்கள் நகரத்தை நோக்கி வந்து கொண்டிருக்கின்றனர். கடந்த சில ஆண்டுகளில், 52 சதவீதம் விவசாயம் சார்ந்த தொழில்களில் வேலைவாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற காரணங்களினால், வறட்சி, இடு பொருட்கள்

விலை ஏற்றம், விவசாய விளை பொருட்கள் விளை குறைவு உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகள் ஏற்படுகின்றன. இந்த நிலையை மாற்றும் தொழில்நுட்பம் விவசாயிகளுக்கு தெரிந்திருக்க வேண்டும்.குறைந்த பயனில், அதிக லாபத்தை ஈட்டும் வகையிலான தொழில்நுட்பத்தை கையாள வேண்டும். அப்போதுதான், தற்போது சமுதாயத்தில் நிலவி வரும் பல்வேறு பிரச்னைகளுக்கும் தீர்வு ஏற்படும்.இவ்வாறு, திட்டக்குழு உறுப்பினர் கூறினார்.தென்னை சாகுபடி, கோ-கோ சாகுபடி, காய்கறி சாகுபடி ஆகியவை குறித்து விளக்கமளிக்கப்பட்டது. விவசாயிகளுக்கு அரசு வழங்கும் சலுகை திட்டங்கள், இயற்கை வேளாண்மை குறித்தும் விளக்கப்பட்டது. தொழில் வர்த்தக சபை செயலாளர் கண்ணன் நன்றி கூறினார்.

**பப்பாளி சாகுபடி சுறுசுறுப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 30,2011,22:30 IST

பொங்கலூர்: பொங்கலூர் வட்டாரத்தில் மாவுப்பூச்சி தாக்குதலால், முற்றிலும் கைவிடப்பட்ட பப்பாளி சாகுபடி தற்போது சுறுசுறுப்பு அடைந்துள்ளது. இப்பகுதியில் பப்பாளி பழத்துக்காகவும், பால் எடுக்கவும் அதிகளவில் பயிர் செய்யப்படுகிறது. இவற்றை வாங்க, பப்பாளி பால் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வந்தன. இந்த பாலை பதப்படுத்தி பப்பெயின் தயாரிக்கப்படுகிறது. இது, உதட்டுச் சாயம் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் தயாரிக்க பயன்படுகிறது. பப்பாளி சாகுபடி செய்த விவசாயிகள், பால் மற்றும் பழம் விற்பனை மூலம் நல்ல லாபம் பார்த்து வந்தனர். சில ஆண்டுகளாக மாவுப்பூச்சி தாக்குதலால், பெரிய அளவில் பாதிக்கப் பட்டனர். ஆயிரக்கணக் கான மரங்கள் அடியோடு அழிந்தன. பல விவசாயிகள், பப்பாளி சாகுபடி செய் வதை நிறுத்தி விட்டனர். கடந்தாண்டு பெய்த மழையால், மாவுப்பூச்சி தாக்குதல் குறைந்துள்ளது. இதனால், புதிதாக பப் பாளி சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். பொல்லிக்காளிபாளையம், முதியாநெரிசல், காட்டூர் உள் ளிட்ட சில இடங்களில் பப் பாளி சாகுபடி செய்யப்பட் டுள்ளது. சில தனியார் நிறுவனங்கள் விவசாயிகளிடம் இருந்து நேரடியாக கொள் முதல் செய்வதாக ஒப்பந் தம் செய்துள்ளன. அவர் கள், கன்று நடவு செய்வதில் இருந்து காய் பறிப்பது வரை தொடர் கண் காணிப்பு மற்றும் ஆலோசனை வழங்குகின்றனர். இதுவும் பப்பாளி சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்ட காரணம்.

**பொங்கலூர் பகுதி குளங்களுக்கு பறவைகளின் வரத்து அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 30,2011,22:30 IST

பொங்கலூர்: பொங்கலூர் பகுதியில் உள்ள குளம், குட்டைகள் சில ஆண்டுகளாக நீர் இன்றி வறண்டு காணப் பட்டன. இதனால், இவை முட்புதர் மண்டியும், பறவைகளின் வரத்து இன்றியும்

வெறிச்சோடி காணப் பட்டன. கடந்தாண்டு பெய்த நல்ல மழை காரணமாக இவைகளில் நீர் வளம் நிரம்பியுள்ளது. முன்பு மீன்கள் இட்ட முட்டைகள் பொறித்து மீன்கள் உற்பத்தியாகியுள்ளன. தற்போது குளங்களுக்கு பறவைகளின் வரத்தும் அதிகரித்துள்ளது. குளக்கரையில் உள்ள மரங்கள் பறவைகள் இளைப்பாறிச் செல்லவும், தங்குவதற்கும் வசதியாக உள்ளது. உணவுக்காகவும், முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்யவும் நீர் வாத்து, நாரை, கொக்கு உள்ளிட்ட பறவையினங்கள் அதிகளவில் வரத்துவங்கியுள்ளன.

**பச்சை மிளகாய் சாகுபடி செய்ய மானிய விலையில் உரம் தேவை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 30,2011,22:04 IST

பல்லடம்: "பல்லடம், சுல்தான்பேட்டை மற்றும் சுற்றுப்பகுதியில் பச்சை மிளகாய் பயிருக்கு தேவையான உரத்தை, மானிய விலையில் வழங்க வேண்டும்,' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். கரடிவாவி, மல்லேகவுண்டம்பாளையம், வாரப்பட்டி, வடவள்ளி, செலக்கரிச்சல் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் பச்சை மிளகாய் விவசாயம் அதிகம் உள்ளது. காய்க்கும் பருவத்தில் இருக்கும் செடிக்கு அதிக பக்குவம் செய்வதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். கடந்த ஒரு மாதமாக சீரான விலையில் விற்றல் மற்றும் வரமிளகாய் நல்ல விலைக்கு விற்பது, விவசாயிகள் இடையே ஆர்வத்தை அதிகரித்துள்ளது.உழவர் சந்தையில் சம்பா கிலோ 20 ரூபாய், உருண்டை மிளகாய் 25 ரூபாய் வரையிலும், வரமிளகாய் கிலோ 100 ரூபாய் வரையிலும் விற்று வருகிறது. வர மிளகாய் நல்ல விலைக்கு விற்பதால், பச்சை மிளகாய் பறிப்பதை குறைத்து, பழத்துக்கு விடுவது அதிகரித்துள்ளது. களையெடுத்து உரமிடும் பணியில் விவசாயிகள் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர். அதிகமான விவசாயிகள், கலப்புரம், டி.ஏ.பி., உள்ளிட்ட உரங்களை பயன்படுத்தி வருகின்றனர். தோட்டக்கலைத்துறை சார்பில் வழங்கப்படும் மானியம், அனைத்து விவசாயிகளுக்கும் கிடைப்பதில்லை. மேலும், விவசாயிகள் பயன்படுத்தும் உரங்கள் கிடைப்பதில்லை. 50 கிலோ கொண்ட உர மூட்டை ஒன்று, 500 ரூபாய் வரை விலை கொடுத்து வாங்குகின்றனர்.ஆட்கள் பற்றாக்குறை, உர விலையேற்றம் உள்ளிட்ட பல்வேறு சிரமங்கள் ஏற்படுகின்றன. பச்சை மிளகாய் பயிருக்கான உரங்களை, மானிய விலையில் கிடைக்க தோட்டக்கலைத்துறை நடவடிக்கை வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**இயந்திரம் மூலம் தேயிலை பறிப்பு பயிற்சி "உபாசி' நிலையத்தில் ஏற்பாடு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 30,2011,23:20 IST

குன்னூர்: "இயந்திரம் மூலம் பசுந்தேயிலை பறிக்க உபாசி வேளாண் அறிவியல் நிலையத்தில் பயிற்சி வழங்கப்படும்' என, தெரிவிக்கப்பட்டுள்ளது. குன்னூர் தேயிலை வாரியம், உபாசி வேளாண் அறிவியல் நிலையம் இணைந்து, குன்னூர் அருகே சோகத்தொரை கிராமத்தில் உள்ள தேயிலை தோட்டத்தில், இயந்திரங்களை பயன்படுத்தி பசுந்தேயிலை பறிக்கும் முறை குறித்த செய்முறை பயிற்சியை வழங்கினர். தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் பேசுகையில், ""தேயிலை தோட்டங்களில் ஆட்பற்றாக்குறையை சமாளிக்க, இயந்திரம் மூலம் பசுந்தேயிலை பறிக்க விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இதன் ஒரு பகுதியாக வேலையில்லா இளைஞர்களுக்கு 50 சதவீத மானியத்தில் இலை பறிக்கும் இயந்திரம், கவாத்து இயந்திரம் மற்றும் தெளிப்பான்கள் வழங்கப்படுகின்றன. இந்த இளைஞர்கள் மூலம் விவசாயிகள் தங்கள் தோட்டங்களில் பசுந்தேயிலை பறித்து கொள்ளலாம். விவசாயிகள் தங்கள் தோட்டங்களில் இயந்திரங்களை பயன்படுத்தி பசுந்தேயிலை பறிக்கும் முறை குறித்து அறிந்து கொள்ள குன்னூர் உபாசி வேளாண் அறிவியல் நிலையத்தை தொடர்பு கொள்ளலாம்," என்றார். உபாசி வேளாண் அறிவியல் நிலைய தொழில்நுட்ப வல்லுனர் ராமமூர்த்தி, இயந்திரங்களின் செயல்பாடு குறித்து விளக்கினார். சிறு விவசாய சங்கங்களை சேர்ந்த 50 உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

**பசுந்தேயிலைக்கு எதிர்பார்த்த விலை இல்லை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 30,2011,23:20 IST

குன்னூர்:"தேயிலை வர்த்தகம் களைகட்டிய போதும், பசுந்தேயிலைக்கு எதிர்பார்த்த விலை கிடைப்பதில்லை' என விவசாயிகள் புலம்புகின்றனர். நீலகிரியில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள் குன்னூரில் உள்ள அரசு, தனியார் தேயிலை ஏல மையங்களின் மூலம் வாரந்தோறும் விற்கப்படுகிறது. ஏல மையங்களில், இம்மாதம் நடந்த நான்கு ஏலமும் களை கட்டியது. வட மாநிலங்களில் தேயிலை மகசூல் குறைந்ததால், கர்நாடகா, ஆந்திரா, ராஜஸ்தான் உட்பட வட மாநில வர்த்தகர்களின் பங்களிப்பு குன்னூர் ஏலத்தில் அதிகளவு இருந்தது; தவிர,ஏற்றுமதி வர்த்தகர்களும் அதிகளவு பங்களித்ததால், ஏலத்தில் போட்டி அதிகரித்தது.நீலகிரியில், பல இடங்களில் உறைபனியால் தோட்டங்களில் பசுந்தேயிலை மகசூல் குறைந்து உற்பத்தி சரிந்த நிலையில், வர்த்தகர்கள் மத்தியில் தேயிலைக்கான தேவை அதிகரித்ததால், ஒரு கிலோ தேயிலை தூளின் குறைந்தபட்ச விலை 50 ரூபாயை தொட்டது.இதனால், சிறு விவசாயிகள், தொழிற்சாலைக்கு வழங்கிய பசுந்தேயிலைக்கு கிலோவுக்கு 10 -13 ரூபாய் விலை வழங்கப்பட்டது; கடந்த வார விலையாக 12.50 ரூபாய் வழங்கப்பட்டது. முதல் தர பசுந்தேயிலைக்கு கிலோவுக்கு 16-18 ரூபாய் வழங்கப்பட்டது.

"தற்போது தோட்டங்களில் மகசூல் குறைந்துள்ள நிலையில், இந்த விலை போதுமானதாக இல்லை; தொழிற்சாலைகள் கூடுதல் விலை வழங்க வேண்டும்,' என சிறு விவசாயிகள் கூறுகின்றனர். குன்னூர், சேலாஸ், கரும்பாலம், எடப்பள்ளி சுற்றுவட்டார விவசாயிகள், தங்கள் பசுந்தேயிலைக்கு, மாதம் ஒரு முறையும், கோத்தகிரி பகுதி விவசாயிகள் வாரம் ஒரு முறையும் விலை பெறுகின்றனர்; பொதுவாக, வார விலையை விட மாத விலை கூடுதலாக இருக்கும். மாத விலையாக, கடந்த மாதம் கிலோவுக்கு 10.50 வழங்கப்பட்டது. இந்த மாதம், வார விலையே 10 - 13 ரூபாய் வரை வழங்கப்படும் நிலையில், மாத விலையும் அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகள் மத்தியில் அதிகரித்துள்ளது.

**மரக்கன்று நடும் விழா**

பதிவு செய்த நாள் : ஜனவரி 30,2011,23:20 IST

குன்னூர்:குன்னூர் வண்டிச்சோலை சாலையின் நடுவே, வெட்டப்பட்ட மரத்துக்கு பதிலாக புதிய மரக்கன்று நடப்பட்டது.குன்னூர் - கோத்தகிரி சாலையில் வண்டிச்சோலை சாலையின் நடுவே ராட்சத மரமும், பயணிகள் நிழற்குடையும் இருந்தது. இந்த பயணிகள் நிழற்குடை பயன்படாமல் இருந்ததால், நெடுஞ்சாலைத் துறை சார்பில் அகற்றப்பட்டது; தவிர, அங்கிருந்த மரமும் காய்ந்துவிட்டதால், வெட்டி அப்புறப்படுத்தப்பட்டது. அந்த இடத்தில் வனம் மற்றும் நெடுஞ்சாØத் துறையினரின் அனுமதியுடன், வண்டிச்சோலை சாரதா பிரம்ம வித்யா கேந்திரா சார்பில், மாதாஜி குருப்பிரியானந்தா, செம்பங்கி மரக்கன்று நட்டார்; ஆசிரமத்தின் சார்பில் அந்த மரக்கன்று பராமரிக்கப்படவுள்ளது.

**விவசாயிகளிடம் பணம் வசூலிப்பதாக நெல்கொள்முதல் மையங்களில் பிரச்னை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 30,2011,20:33 IST

மதுரை : நெல் கொள்முதல் மையங்களில் வியாபாரிகள் நுழைவதும், விவசாயிகளிடம் பணம் வசூலிப்பதும் நடப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.மதுரை மாவட்டத்தில் நெல் அறுவடை துவங்கி உள்ளது. இதையொட்டி அரசு சார்பில் நெல் கொள்முதலும் செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்கிறது.
17 சதவீதத்திற்கு குறைந்த ஈரப்பதம் உள்ள நெல்லே கொள்முதல் செய்யப்படும். இதற்கு குவிண்டாலுக்கு 1050 ரூபாய், பொன்னி உட்பட சன்னரக நெல் என்றால் 1100 ரூபாய் வழங்கப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் மதுரை வடக்கு, தெற்கு, உசிலம்பட்டி, மேலூர்,

வாடிப்பட்டி தாலுகாக்களில் 40 இடங்களில் கொள்முதல் மையம் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் 14 மையங்கள் வரை தற்போது செயல்படத் துவங்கியுள்ளன. மற்ற இடங்களில் அறுவடையைப் பொறுத்து மையங்கள் செயல்படும்.

சில விவசாயிகள் கூறுகையில், "கடந்த ஆண்டு மத்திய அரசு சாதாரண நெல்லுக்கு 900 ரூபாய், சன்னரக நெல்லுக்கு 950 ரூபாய் என அறிவித்தது. அப்போது மாநில அரசு ஊக்கத் தொகையாக குவிண்டாலுக்கு 150 ரூபாய் வழங்கியது. இந்த ஆண்டு மத்திய அரசே 1050 ரூபாய், தரமான நெல்லுக்கு 1100 ரூபாய் என அறிவித்துள்ளது. இதற்கு மாநில அரசு ஊக்கத் தொகையை இதுவரை அறிவிக்கவில்லை. இந்த ஆண்டு மழை, நோய் பாதிப்பால் 20 சதவீத மகசூல் பாதிப்பு இருந்தது. மேலும் உரவிலையும் 10 சதவீதம் வரை கூடிவிட்டது. எனவே தாமதப்படுத்தாமல் ஊக்கத் தொகையை அரசு அறிவிக்க வேண்டும்,' என்றனர்.

குற்றச்சாட்டு என்ன?: நெல் கொள்முதல் மையங்களில் உள்ள பிரச்னைகள் குறித்து விவசாயிகள் கூறியதாவது: நெல் கொள்முதல் மையங்களில் 40 கிலோ மூடைக்கு ஏற்றுக் கூலி, இறக்குக் கூலியாக 20 ரூபாய் வரை தரவேண்டும் என ஊழியர்கள் வற்புறுத்துகின்றனர். நுகர்பொருள் வாணிப கழகமே, அவர்களுக்கு மூடையை தைத்து அடுக்க 1.16 ரூபாயும், ஏற்றுக்கூலி, இறக்குக் கூலியாக டன்னுக்கு 17.95 ரூபாயும் வழங்குகிறது. எனவே விவசாயிகளை பொறுத்தவரை நெல் கொள்முதல் மையங்களில் எதற்காகவும், யாருக்கும் பணம் தரத்தேவையில்லை.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் தேவராஜ் கூறியதாவது: 70 கிலோ மூடையை பிரித்து 35 கிலோ மூடையாக மாற்றும்போது, மூடைக்கு 18 ரூபாய் வரை கேட்கின்றனர். இதுபோக அந்தந்த பகுதி அரசியல் பிரமுகர்களுக்கென மூடைக்கு 50 காசும் கேட்கின்றனர். சிலபகுதியில் அந்தந்த ஊருக்கென தனியாரே கமிஷன் கேட்கின்றனர். வியாபாரிகளும் கொள்முதல் மையங்களில் நுழைகின்றனர், என்றார்.

## மலர் கண்காட்சியில் 110 ஆண்டு பழமையான கவின் ரக நெல் பார்வையாளர்கள் வியப்பு



110 ஆண்டுகள் பழமையான கவின் ரக நெல் சிவலிங்க மாக வடிவமைக்கப்பட்டு உள்ளதை படத்தில் காணலாம்.

*கோவை,ஜன.31–*

*கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் நடைபெற்று வரும் மலர் கண்காட்சியில், 110 ஆண்டுகள் பழமையான கவின் ரக நெல் வைக்கப்பட்டு உள்ளது. இதை கண்காட்சியில் கலந்து கொண்ட பார்வையாளர்கள் வியப்புடன் கண்டு ரசித்தனர்.*

*கவின் ரக நெல்*

*கோவை வேளாண் பல்கலைக்கழக தாவரவியல் பூங்காவில் 4–வது ஆண்டு மலர் கண்காட்சி நடைபெற்று வருகிறது. இந்த கண்காட்சியில் உள்நாடு மற்றும்*

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 2 லட்சத்துக்கும் மேற்பட்ட மலர் ரகங்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு உள்ளன. கண்காட்சியின் ஒரு பகுதியாக ஏராளமான ஸ்டால்கள் அமைக்கப்பட்டு வீட்டுக்கு தேவையான பொருட்கள், மூலிகை தாவரங்கள், அரியவகை பொருட்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு உள்ளன.

அந்தவகையில் 110 ஆண்டுகள் பழமையான கவின் ரக நெல், நூலில் கோர்க்கப்பட்ட நிலையில், சிவபெருமாள் சாமியின் லிங்கமாக வடிவமைத்து போட்டோ போன்று பிரேம் செய்து கண்காட்சியில் வைக்கப்பட்டு உள்ளது. இதை கண்காட்சிக்கு வந்து பார்வையிட்ட பார்வையாளர்கள் வியப்புடன் கண்டு ரசித்தனர்.

110 ஆண்டுகள் பழமையானது

இது தொடர்பாக கண்காட்சி அரங்கில் பழமையான ரக நெல்லை பார்வைக்கு வைத்துள்ள கோவை ஆர்.எஸ்.புரத்தை சேர்ந்த சேது கூறியதாவது:–

என்னுடைய முன்னோர்கள் காலத்தில் பர்மாவில் விளைவிக்கப்பட்டது இந்த கவின் ரக நெல் ஆகும். என்னுடைய தந்தை வெங்கடாச்சலம் செட்டியார் மூலம் சிவலிங்கம் போன்று நூலில் கோர்த்து வடிவமைக்கப்பட்டு போட்டோவாக பிரேம் செய்து பூஜை அறையில் வைத்து வழிபட்டு வருகிறேன். இந்த நெல் இதுவரை எந்தவிதமான சேதமும் அடையாமல் வடிவமைக்கப்பட்டது போன்று அப்படியே உள்ளது.

இந்த ரக நெல் செட்டிநாடான வளையப்பட்டி பகுதியில் மட்டுமே அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு பல்வேறு மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

என்னுடைய முன்னோர்களால் உற்பத்தி செய்யப்பட்ட கவின் ரக நெல்லை 110 ஆண்டுகளாக என்னுடைய தந்தையை தொடர்ந்து என்னால் பாதுகாக்கப்பட்டு வருவது பெருமை அளிக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.



கோவை வேளாண் பல்கலைக்கழக தாவரவியல் பூங்காவில் 2–வது நாளாக மலர் கண்காட்சி நேற்று நடைபெற்றது. இந்த கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் நீண்டவரிசையில் நின்று ஆர்வமுடன் பார்த்து ரசித்த காட்சி.

### வேளாண் பல்கலைக்கழகத்தில் மலர் கண்காட்சி

# கோவை மக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதம்

## பார்வையாளர்கள் பரவசம்

கோவை,ஜன.31–

கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் நடைபெற்று வரும் மலர் கண்காட்சி கோவை மக்களுக்கு காண கிடைத்த வரப்பிரசாதம் என்று பார்வையாளர்கள் பரவசத்துடன் பேட்டி அளித்தனர்.

### மலர் கண்காட்சி

கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள தாவரவியல் பூங்காவில் 4–வது ஆண்டு மலர் கண்காட்சி 2–வது நாளாக நேற்று நடைபெற்றது. இந்த மலர் கண்காட்சியில் 200 வகையான மலர் குடும்பங்களை சேர்ந்த 2 லட்சம் வண்ண பூக்களை பல்வேறு வடிவங்களிலும், கண்ணையும், மனதையும் கவரும் வகையிலும் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டு உள்ளது.

கண்காட்சியில் கார்னேசன், ரோஜா, மஞ்சள், ஆரஞ்சு நிறங்களில் பூத்துள்ள வில்லியம்ஸ், ஆர்கிட் மலர்களும், சைப்ரஸ், அஸ்பாரகஸ், துஜா, போடோகார்பஸ், பேபிபூக்லிபிடஸ், சில்வர் டால், மார்க்வுட் ஆகிய பெயர்களைக் கொண்ட அழகு இலை தாவரங்களும், செலிகோரியா மற்றும் போர்டு ஆப் பாரடைஸ் ஆகிய மலர்கள் ஆந்தூரியம் மலர்கள், போர்டு ஆப் பாரடைஸ் என்ற மஞ்சள் நிறத்தில் பூத்துள்ள மலரும், அகபாந்தஸ் என்ற புளூ மற்றும் வெள்ளை நிறம் கொண்ட வில்லி பூக்களும், ஹைட்ராலியா என்ற நிறமாறும் மலர்களும், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புரோட்டியா, குயின் மலர்களும், ஆர்கிட் மலர்களும் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

### சாரதா ராமசாமி

இந்த மலர் கண்காட்சியை பார்த்து ரசித்த பார்வையா



ளர்கள் பேட்டி அளித்தனர். அப்போது அவர்கள் கூறியதாவது:–

சாரதா ராமசாமி கூறும்போது, 'கோவையில் இது போன்ற மலர் கண்காட்சிகள் நடைபெறுவது வரவேற்கதக்கது. கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள விதவிதமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மலர்கள் மிகவும் அழகாக உள்ளன. குட்டையாக வளர்ந்துள்ள மரங்கள், போன்சாய் மரங்கள் அனைவரையும் கவரும் வகையில் உள்ளது. யானை, ரெயில், ஹார்டின், ராக்கெட் வடிவ மலர் அலங்காரங்கள் சிறப்பாக வடிவமைக்கப்பட்டு உள்ளன.

கோவையில் வெயில் சுட்டு எறித்து கொண்டு இருக்கும் வேளையில், கண்காட்சி அமைக்கப்பட்டுள்ள வேளாண் பல்கலைக்கழக வளாகம் குளுகுளுவென்று ஊட்டியில் உள்ளதைபோன்ற உணர்வை ஏற்படுத்துகிறது. அனைவரும் குடும்பத்துடன் கண்டு ரசிக்கக்கூடியதாக இந்த கண்காட்சி அமைந்து உள்ளது' என்றார்.

### நிரஞ்சனா

கல்லூரி மாணவி நிரஞ்சனா கூறும்போது, 'இது பார்க்காத பலவகை மலர்கள் இந்த கண்காட்சியில் இடம்பெற்று உள்ளது. இவற்றை



பார்த்து ரசித்தது மிகவும் சந்தோசமாக உள்ளது. கண்காட்சியில் மலர்களை தவிர பொழுதுபோக்கு அம்சங்களாக ஆடல்–பாடல் நிகழ்ச்சிகள், ஸ்டால்களில் வீட்டு உபயோக பொருட்கள் என பல்வேறு சிறப்பு அம்சங்கள் உள்ளன. கண்காட்சிக்காக செய்யப்பட்டு உள்ள ஒவ்வொரு ஏற்பாடுகளும் சிறப்பாக செய்யப்பட்டு உள்ளது. அனைத்து வயதினரும் பார்த்து ரசிக்கும் வகையில் இந்த கண்காட்சி அமைந்து உள்ளது' என்றார்.

### மது–பிரீத்தி

மது–பிரீத்தி, 'ஊட்டியில்



ஆண்டுதோறும் நடைபெறும் மலர் கண்காட்சியை பார்க்க முடியாதவர்களுக்கு இந்த கண்காட்சி ஒரு மிகச்சிறந்த வாய்ப்பாக அமைந்து உள்ளது. கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள அனைத்து வகையான மலர்களும் மிகவும் அழகாகவும், பல்வேறு வடிவங்களிலும் உள்ளன. இது அனைவரும் பார்த்து ரசிக்க வேண்டிய ஒன்றாகும். கண்காட்சி வளாகத்திற்குள் குளுகுளு நிலவும் குளுகுளு காலநிலை நன்றாக உள்ளது' என்றார்.

### மாணவி வாணி

கல்லூரி மாணவி வாணி கூறும்போது, 'மலர் கண்காட்சி பார்வையாளர்களின் கண்



களுக்கு விருந்து அளிப்பதாகவும், மனதுக்கு மகிழ்ச்சி அளிப்பதாகவும் அமைந்து உள்ளது. நான் கடந்த கடந்த 2 ஆண்டுகளாக இந்த கண்காட்சிக்கு வந்து உள்ளேன். கடந்த ஆண்டு 2 நாட்கள் நடைபெற்றது. இந்த ஆண்டு 3 நாட்கள் நடைபெற உள்ளது. இதனால் அனைவரும் இந்த கண்காட்சியை கண்டு ரசிக்க ஒரு வாய்ப்பு உருவாகி உள்ளது. உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள அனைத்து ரக மலர்களையும் ஓரே இடத்தில் பார்த்து ரசிப்பது மகிழ்ச்சியாக உள்ளது' என்றார்.

### தியாகராஜன்–கோமதி

தியாகராஜன்–கோமதி தம்பதியினர் கூறும்போது, 'இந்த மலர் கண்காட்சி கோவை



மக்களுக்கு காண கிடைத்த வரப்பிரசாதம் ஆகும். எவ்வளவு பேர் முயற்சி செய்தாலும் இது போன்ற பிரம்மாண்ட மலர் கண்காட்சியை அமைக்க முடியாது. ஒவ்வொரு ரக மலர்களும் அனைவரும் கண்டு ரசிக்க வேண்டியது. அனைத்து வகையான மலர்களும் காண்பதற்கு மிகவும் அழகாக உள்ளன. கடந்த 2 ஆண்டுகளாக மலர் கண்காட்சியை குடும்பத்துடன் பார்த்து ரசித்து வருகிறேன். இது போன்ற கண்காட்சிகள் கோவையில் அதிகம் நடத்தப்பட வேண்டும். பொழுது போக்கு அம்சம் மிகுந்ததாக இந்த கண்காட்சி அமைந்து உள்ளது' என்றனர்.

### பெல்லியேல் சிங்

பள்ளி மாணவன் பெல்லியேல் சிங் கூறும்போது, 'மலர் கண்காட்சியில் இதுவரை பார்க்காத ஏராளமான பூக்கள் இடம் பெற்று



உள்ளன. குட்டையான மரங்களில் காய்கள் காய்த்து இருப்பது, பூக்களை கொண்டு உருவாக்கப்பட்ட யானை, ராக்கெட், ரெயில் போன்ற வடிவங்கள் என்னை மிகவும் கவர்ந்தது. அரியவகை பூக்களின் புகைப்படங்கள் ஏராளமானவை இந்த கண்காட்சியில் இடம்பெற்று உள்ளன. இவற்றை பார்த்து மிகவும் வியப்பு அடைந்தேன். கண்காட்சியை பெற்றோர் மற்றும் சகோதரிகளுடன் கண்டு ரசித்து வருகிறேன்' என்றார்.

### சுமதி சுரேஷ்

சுமதி சுரேஷ் கூறும்போது, 'மலர் கண்காட்சி மிக சிறப்பாக உருவாக்கப்பட்டு உள்ளது. இதில் லட்சக்கணக்கான



மலர்கள் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்டு உள்ளது. இவற்றை எங்கள் குழந்தைகள் ஆர்முடன் கண்டு ரசித்தனர். பலரக பூக்கள் கொண்டு வரப்பட்டு இருந்தாலும், அவை பார்வையாளர்கள் பார்த்து ரசிப்பதற்கு ஏற்ப பெயர்கள் குறிப்பிட்டு சிறப்பாக வரிசைப்படுத்தி வைக்கப்பட்டு உள்ளன. ரெயில், யானை ஆகியவற்றின் வடிவங்கள் சிறப்பான வேலைப்பாடுகளுடன் உருவாக்கப்பட்டு பார்வைக்கு வைக்கப்பட்டு உள்ளன. இந்த கண்காட்சி மகிழ்ச்சி அளிப்பதாகவும், பல்வேறு தகவல்களை அளிப்பதாகவும் அமைந்து உள்ளது' என்றார்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.